


உ

## சிவயோக சுவாமி திருவடி நிலைய

# திறப்புவிழா மலர்

## Sivayogaswami Thiruvadi Centre

# OPENING DAY CEREMONY SOUVENIR

**சிவயோக சுவாமி**
**நம்பிக்கை நிதியம்**
**இல. 53, விவேகானந்தா வீதி,**
**வெள்ளவத்தை.**

**31-08-2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்



| | | பக்கம் |
|---|---|---|
| 01. | எங்கள் குருநாதன் | 2 |
| 02. | திருவருள் கைகூடுது | 5 |
| 03. | இறைவா உனக்க பயம் | 5 |
| 04. | வெளியீட்டுரை | 6 |
| 05. | வாழ்த்துச் செய்திகள் | 8 - 18 |
| 06. | சிவயோக சுவாமிகள் குரு தரிசனம் | 19 |
| 07. | எட்டிலும் எண்பதிலும் | 24 |
| 08. | அதுவும் இதுவும் | 28 |
| 09. | திருவடி வழிபாடு | 32 |
| 10. | மக்கள் நேசிக்கும் ஆத்மீக ஞானி சிவயோக சுவாமிகள் | 35 |
| 11. | எனது குருபரன் சிவயோக சுவாமி | 41 |
| 12. | யோகர் சுவாமி ஓர் ஞானத்தீர்க்கதரிசி | 44 |
| 13. | Homage to Siva Yogaswami | 48 |
| 14. | A Memorable Feat of Achievement | 53 |
| 15. | Dawn of New Manifestation | 55 |
| 16. | Siva Yoga Swami A Few Reminiscences by Samy Pasupati | 61 |
| 17. | A Devotee of Sivayogaswami | 65 |
| 18. | Great Sages of Sri Lanka | 67 |
| 19. | சிவதொண்டு, சிவத்தியானம் | 70 |
| 20. | சிவயோக சுவாமிகள் அருள்மொழிகள் | 71 |
| 21. | Words of Our Master | 72 |
| 22. | நற்சிந்தனை பாடல்கள் | 73-79 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | - | சிவயோக சுவாமி திருவடி நிலைய திறப்புவிழா மலர் |
| வெளியீடு | - | சிவயோக சுவாமி நம்பிக்கை நிதியம் - கொழும்பு |
| முதற்பதிப்பு | - | ஆவணித் திங்கள் 2016 |
| பக்கங்கள் | - | 88 |
| பதிப்புரிமை | - | சிவயோக சுவாமி நம்பிக்கை நதியம் - கொழும்பு |
| அச்சிட்டோர் | - | லக்ஷ்மி பிரிண்டர்ஸ் |
| விலை | - | ரூபா. 300/- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபரன் சிவயோக சுவாமிகள்



ஒரு பொல்லாப்பும் இல்லை
எப்பவோ முடிந்த காரியம்
முழுவதும் உண்மை
நாமறியோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவானா னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன் 1

தேகம்நீ யல்லவென்றா னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்ததென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன் 2

வாசியோகந் தேரென்றா னெங்கள்குரு நாதன்
வகாரநிலை அறியென்றா னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்றா னெங்கள்குரு நாதன்
கங்குல்பக லில்லையென்றா னெங்கள்குரு நாதன்
நாசிநுனி நோக்கென்றா னெங்கள்குரு நாதன்
நடனந்தெ ரியுமென்றா னெங்கள்குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்றா னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றா னெங்கள்குரு நாதன் 3

இருவழியை அடையென்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்றா னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்றா னெங்கள்குரு நாதன்
ஒருவருமறியாரென்றா னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள்குரு நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருமலனா யிருவென்றா னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்

4

திக்குத் திகாந்தமெல்லா னெங்கள்குரு நாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள்குரு நாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள்குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றா னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்றா னெங்கள்குரு நாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்

5

தேடாமல் தேடென்றா னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடென்றா னெங்கள்குரு நாதன்
நல்லவழி தோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடென்றா னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்
வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன்

6

தித்திக்கு மொருமொழியா னெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன்

7

ஆதியந்த மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்றா னெங்கள்குரு நாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குரு நாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதியருங் காணவெண்ணா னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தத்தா னெங்கள்குரு நாதன் 8

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குரு நாதன்
முடக்கிக் கிடந்திடென்றா னெங்கள்குரு நாதன்
அச்சமொடு போபமில்லா னெங்கள்குரு நாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
பச்சைப் புரவியிலே யெங்கள்குரு நாதன்
பாங்காக ஏறென்றா னெங்கள்குரு நாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குரு நாதன்
தாவுபரி கட்டென்றா னெங்கள்குரு நாதன் 9

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
போமேபோம் வினையென்றா னெங்கள்குரு நாதன்
போக்குவர வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள்குரு நாதன் 10





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருள் கைகூடுது

இராகம் - சாவேரி　　　　　　　　　　　　　　　　தாளம் - ஆதி

பல்லவி

திருவருள் கைகூடுது சிந்தை களிகூருது

அநுபல்லவி

ஒருவரும் எதிரில்லாத உண்மை முதிருது (திருவருள்)

சரணங்கள்

ஒன்றோ விரண்டோ வென்னுஞ் சந்தேகந் தெளியுது
ஓம்சிவாய நமவென்ன உள்ளங் குளிருது (திருவருள்)
அதிர வரும்நமனும் அஞ்சியே பணிசெய்யும்
அஞ்சுவ தொன்றுமில்லை அஞ்சவரு வதுமில்லை
(திருவருள்)

## இறைவா உனக்கபயம்

என்னையெனக் கென்னாலே காட்டிவைத்த இறைவா
எல்லாஞ்செய வல்லவனே என்றன் பெருமானே
அன்னையினும் அப்பனினும் அன்புமிக்க அரனே
ஆன்மாவுக் கான்மாவே யாதியந்தம் இல்லானே
தென்னைபனை சேரிலங்கைத் திருவேயென் செல்வமே
தேவாதி தேவனே சிறியே னுனக்கபயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

சிவயோகசுவாமிகள் இலங்கையின் வடபுல யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் ஒரு கொட்டிலில் வாழ்ந்த ஞானி. அவர் ஐம்பது வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் ஞான ஒளி பரப்பி மக்களை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி காட்டியவராவார். சுவாமிகளைச் சந்தித்த அடியவர்கள் அன்பர்கள் எல்லோரும் அவருடைய திருவருளைப் பெற்றுள்ளார்கள். அவர்கள் 1964ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி சாமாதி அடைந்தார். அவர் இருந்த காலத்திலே அதாவது 1953ம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சிவதொண்ட நிலையம் ஸ்தாபிக்கப் பட்டது. அதன் பின்னர் அவரின் சமாதிக்குப் பிறகு 1965ஆம் ஆண்டு மட்டக்களப்பு செங்கலடியில் ஒரு சிவதொண்டன் நிலையம் ஆரம்பிக்கப் பட்டது. இவ்விரு சிவதொண்டன் நிலையங்களும் சுவாமி காட்டிய வழியில் தொண்டாற்றுகின்றன. இவை இரண்டும் சுவாமிகளினால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புக்களாகும். கொழும்பில் உள்ள சுவாமியின் திருவடி வழிபாட்டை, சுவாமி திருவடிப்பேறு பெற்ற அடுத்த மாதம் தொடங்கி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்தி வந்தனர். அக்காலத்தில் சுவாமியின் ஆளுமைக்கும் அன்புக்கும் பாத்திரமானவர்கள் கொழும்பிலே நிறையவே இருந்தார்கள், அதனால் ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஆயிலிய நட்சத்திரத்தன்று திருவடி வழிபாடு சிறப்பாக நடாத்தப்பட்டது.

1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் காரணமாக கொழும்பு வாழ் தமிழ் மக்கள் யாழ்ப்பாணம் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் சுவாமிகளுடைய திருவடி வழிபாடு செய்வதில் தடை ஏற்பட்டது. சிறிது காலத்தின் பின் கொழும்பிற்கு மீண்டு வந்து சேர்ந்த அன்பர்கள் சுவாமியினுடைய திருவடி வழிபாட்டைச் செய்ய வேண்டும் என்று தொடங்கினார்கள். இதற்காக சுவாமியினுடைய மெய்யன்பராகிய மறைந்த கலாநிதி.சோ.சண்முகசுந்தரன் என்பவர் சிவயோகசுவாமி நம்பிக்கை நிதியம் என்று ஒரு அமைப்பை 1993ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் திகதி ஏற்படுத்தினார். இந்த சிவயோக சுவாமி நம்பிக்கை நிதியத்தினர் கடந்த 23 வருடங்களாக சுவாமியின் திருவடி வழிபாட்டைச் செய்து வருகின்றனர்.

சிவயோக சுவாமி நம்பிக்கை நிதியம் ஆரம்பமான காலத்திலிருந்தே சுவாமிக்கு ஒரு நிரந்தமான ஆச்சிரமம் அமைக்க முயன்று வந்திருக்கின் றார்கள். ஆனால் அது இலகுவான காரியமாக இருக்கவில்லை, இருந்த போதிலும், சுவாமிகளின் திருவருளினாலே சில அடியார்கள் அன்பர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பண உதவி செய்ய முன்வந்தார்கள். அவர்கள் செய்த பண உதவியினால் 53 விவேகானந்தா வீதி, வெள்ளவத்தையில் சுவாமி சமாதி எய்தி 50 ஆண்டு நிறைவில் 2014ம் ஆண்டு ஒரு நிலம் கொள்வனவு செய்து அதில் இரண்டு மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. இதுவே சிவயோக சுவாமி திருவடி நிலையம் எனப் பெயரிடப்பட்டு 31.08.2016 புதன்கிழமை காலை திறந்து வைக்கப் படுகின்றது.


இந்தத் திறப்பு விழா அன்று சிவயோகசுவாமி திருவடி நிலைய திறப்புவிழா மலர் ஒன்றும் வெளியிடுகின்றோம். இந்த மலரில் அறிவுசார்ந்த பெருமக்களுடைய கட்டுரைகள், இந்து அமைப்புக்களின் தலைவர்களின் வாழ்த்துச் செய்திகள், நற்சிந்தனைப் பாடல்கள் சுவாமிகளின் அருள் மொழிகள் என்பன சேர்க்கப்பட்டுள்ளது. எனவே இந்த திருவடி நிலைய கட்டிடத்திற்கு கட்டிடப் பொருள்களும், சுவாமியின் திரு உருவச்சிலை செய்து உதவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கும், பண உதவிகள் செய்த உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்களுக்கும், இந்தக் கட்டிடத்தை குறுகிய காலத்தில் கட்டித் தந்துதவிய கட்டிட ஒப்பந்தக்காரர் திரு.செ.திருச்செல்வம் அவர்களுக்கும், திறப்பு விழாவில் கலந்து கொள்கின்ற பெரியார்கள், அன்பர்கள், அடியார்கள், இந்த திறப்பு விழா மலரை அழகாக அச்சிட்டு உதவிய லக்ஷ்மி அச்சகத்தார், சிவயோக சுவாமி நம்பிக்கை நிதிய நிர்வாகத்தார் எல்லோருக்கும் சிவயோக சுவாமியினுடைய திருவருளும், குருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். சிவயோக சுவாமிகள் திருவடிப் பேறு பெற்று 52 ஆண்டுகள் சென்றாலும் சிவயோக சுவாமி இன்னும் தோன்றாத் துணையாக இருந்து இலங்கையிலும் வெளி நாட்டிலும் வாழ்கின்ற அடியார்களுக்கு அருள் புரிகின்றார் என்பதில் ஐயமில்லை.

த.செ.சிவசுப்பிரமணியம்
செயலாளர்
சிவயோகசுவாமி நம்பிக்கை நிதியம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமி நம்பிக்கை நிதியம்

வாழ்த்துச் செய்தி: தலைவர் ச.ஸ்ரீரஞ்சன்

எங்கள் குருநாதன் சிவயோகசுவாமிகள் சொல்வார் எல்லாம் எப்பவோ முடிந்த காரியம். நாங்கள் நினையாப்பிரகாரமாக எத்தனையோ காரியங்கள் நடக்கின்றன. நாங்கள் நினைக்கின்ற படியும் காரியங்கள் நடப்பதில்லை. எப்பவோ தீர்மானித்தபடி காரியங்கள் நடக்க வேண்டிய முறைப்படி நடக்கின்றன என்பதே உண்மை. சிவயோக சுவாமிகள் திருவடி நிலையமும் அப்படியே.

சிவயோக சுவாமிகளின் அன்பர்கள் பலரும் விரும்பியபடியே சிவயோக சுவாமி திருவடி நிலையம் கொழும்பு வெள்ளவத்தையில் உருவாகி இருக்கின்றது. அவனருளாலே அவன்தாள் வணங்கி என்பதற்கிணங்க அவனருளாலே இந்த மண்டபம் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது என்பதே முழுமையான உண்மை.

இத்தியான மண்டபத்தை அமைப்பதற்குப் பலரும் பொருளுதவிகள் வழங்கியிருக்கின் றார்கள். சிவயோக சுவாமிகளை அறியாத அன்பர்களும் பொருளுதவி வழங்கி இருக்கின்றார்கள். சிவயோக சுவாமிகளை நன்கு அறிந்து அவரின் ஆசி பெற்றவர்கள் இந்தத்திருப்பணிக்கு உதவி செய்ய மறுத்தும், மறந்தும் இருக்கின்றார்கள். எல்லாம் அவன் செயல் என்பதே உண்மை. நாங்கள் கருவிகள் மாத்திரமே.

1993ம் ஆண்டு திரு.சோ.சண்முகசுந்தரன் அவர்கள் இந்தத் தியான மண்டபத்தை உருவாக்கிய இலங்கை சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியத்தை, தனது சேமிப்பான ரூபாய் 50,000/= முதலாக போட்டு ஆரம்பித்து வைத்தார். அவ்வாறு 1993ம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியமே இன்று அவனருளாலே பெரும் வளர்ச்சி கண்டு இந்த சிவயோக சுவாமிகள் திருவடி நிலையம் என்று பெயரிடப்பட்டுள்ள தியான மண்டபத்தை உருவாக்கியிருக்கின்றது. சுருக்கமாகக் கூறினால் ஒரு குறுகிய காலத்தில் பல பெரிய விடயங்கள் நடந்தேறியுள்ளன.

சிவயோகசுவாமிகளின் போதனைகளை அன்பர்கள் அறிந்து பின்பற்ற வேண்டும் என்பதே இந்த ஸ்தாபனத்தின் குறிக்கோளாகவும் இருக்கின்றது. இந்த மண்டபத்திற்கு வரும் காலங்களில் வருகை தர இருக்கும் அன்பர்கள், ஆசானின் போதனைகளையும், அறிவுரைகளையும் விளங்கி, உணர்ந்து உய்ய வேண்டும் என்பதே எமது விருப்பம்.

இந்தத் தியான மண்டபத்தின் ஒரு பகுதியில் ஒரு புத்தகசாலையும் நிறுவப்பட்டிருக்கின்றது. அங்கு வைக்கப்பட்டிருக்கும் நூல்களைப் படிப்பது மாத்திரம் போதாது. நம்மை நாம் அறிந்து கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். தியானமண்டபம் இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தியான மண்டபத்தில் நிறுவப்பட்டிருக்கும், ஒரு அன்பர் தந்து உதவிய (Marble) சலவைக்கல்லால் ஆன சிவயோக சுவாமிகளின் உருவச் சிலையும், இன்னுமொரு அன்பர் தம்மிடம் பாதுகாக்கப்பட்டு வைத்திருந்து தந்த தியான மண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சிவயோக சுவாமிகளின் அஸ்த்தியும் தான் இந்த தியான மண்டபத்தின் ஆஸ்திகளுமாகும். இவைகள் இறைவன் அருளால் எங்களுக்குக் கிடைத்த பொக்கிசங்கள் ஆகும். இவைகளைப் பாதுகாத்து பயன்பெற்று உய்வது எங்களது தவப்பேற்றினால் எங்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதங்கள்.

எல்லாம் எப்பவோ முடிந்த காரியம், முழுவதும் உண்மை, நாமறியோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



July 6, 2016

# TO THE THIRUVADI NILAYAM OF COLOMBO

Many blessings from the Kauai Aadheenam peedam of the Kailasa Parampara to the Colombo devotees of Sivayoga Swami on the occasion of the Sivayoga Swami Trust of Sri Lanka's opening its Sivayogaswami Thiruvadinilayam with ceremonies on August 29th and August 31st, 2016.

I am sure the Thiruvadinilayam will help keep alive in the Colombo area Sivayoga Swami's timeless message of Sivathondu—service to God Siva. To quote from Words of Our Master: "See everything you see as Siva. Do everything you do as Sivathondu. Give up this 'I' and 'mine'."

Bodhinathaveylanswami

Satguru Bodhinatha Veylanswami
Jagadacharya, Nandinatha Sampradaya
Kauai Aadheenam, Hawaii, USA


**Satguru Bodhinatha Veylanswami**

163rd Jagadāchārya of the Nandinātha Sampradāya's Kailāsa Paramparā, President of Śaiva Siddhānta Church, Himālayan Academy, HINDUISM TODAY Magazine & Hindu Heritage Endowment
Kauai Aadheenam • 107 Kaholalele Road, Kapaa, Hawaii USA 96746-9304
www.Gurudeva.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RAMAKRISHNA MISSION
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.
Email - rkmcey@gmail.com

Phone - 2588253
5013805
Fax - 2361438

## ஆசியுரை

இலங்கை சிவயோக சுவாமி நம்பிக்கை நிதியத்தினால், வெள்ளவத்தையில் இல.53, விவேகானந்த வீதியில் அமைந்துள்ள சிவயோகசுவாமி திருவடி நிலையத்தின் புதிய ஆலயத்தின் திறப்புவிழா 31.08.2016 அன்று நடைபெற இருப்பதும், அதனையொட்டிசிறப்பு மலர் ஒன்று வெளியிட இருப்பதையும் அறிந்து மகிழ்வுறுகிறேன். இந்த இரு நிகழ்வுகளும் சீரும் சிறப்புடன் நிறைவேற எல்லாம் வல்ல ஆண்டவன் அருளையும் ஆசியையும் வேண்டுவதோடு என் அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"பாமரனை பண்புள்ளவனாக்குவதும், பண்புள்ளவனை தெய்வமாக்குவதே மதம்". "மதத்தின் இரகசியங்கள் எல்லாம் கொள்கைகளில் இல்லை, செயல்முறையில் தான் உள்ளது. நல்லவனாக இருப்பதும், நன்மை செய்வதும் தான் மதத்தின் முழுப் பரிமாணம்". என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

தவத்திரு சிவயோக சுவாமி அவர்கள் சமீபகாலமாக மக்களுடன் ஒருவரோடு ஒருவராக வாழ்ந்தும், ஆன்மீகத்தில் உயர்ந்ததோடு, மக்கள் அனைவரும் அந்த உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பதை அவர் வாழ்க்கையின் மூலமாகவும் உபதேசங்கள் மூலமாகவும் எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்த காலகட்டத்தில் மீண்டும் மேற்படி கருத்துக்களை மக்களிடையே வேரூன்றவைத்து மனிதன் உயர்ந்த குறிக்கோள்களுடன் வழமான வாழ்க்கையை வாழ வழி வகுக்கவும், சிவயோகசுவாமி திருவடி நிலையத்தின் பணிகள் வளரவும், பாடுபடும் அதன் தலைவர், அங்கத்தினர்கள், தொண்டர்கள் ஆகிய அனைவருக்கும் தன் அருளையும் ஆசிகளையும் அளிக்குமாறு இறைவனையும் சிவயோகசுவாமிகளையும் வேண்டுவதோடு சிவயோகசுவாமி திருவடி நிலையத்தின் பணிகள் மேன்மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

*01/08/2016*

கொழும்பு.

இறைபணியில்,

சுவாமி சர்வரூபானந்த

(சுவாமி சர்வரூபானந்த)

தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA SARADA MISSION - LANKA BRANCH**
52/1, Vivekananda Road, Colombo-6, Sri Lanka.
Tel: 011 - 2361211 email : ceysara@gmail.com

Date: 03/08/2016

கௌரவ தலைவர்/ செயலாளர்,
சிவயோகசுவாமிகள் நம்பிக்கை நிதியம்,
சிவயோகசுவாமி திருவடி நிலையம்,
இல.53,விவேகானந்தா வீதி,கொழும்பு .06

பிரார்த்தனை

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் உள்ள சிகாகோவில் நடைபெற்ற சர்வ மத மகாசபையில் உரையாற்றியதுடன் சுமார் நான்கு ஆண்டுகள் அங்கு தங்கி பிரச்சாரம் செய்து சனாதன ஹிந்து தர்மம் செயல்முறை ஆன்மீகத்தின் நிரந்தர நீரூற்று ,வெறும் மூட நம்பிக்கைகளின் மூட்டை அல்ல என்ற ஆணித்தரமான கருத்தை நிலைநிறுத்தினார். அங்கிருந்து தாயகம் திரும்பும் வழியில் இலங்கைக்கு விஜயம் செய்து யாழ்ப்பாண ஹிந்துக்களின் வரவேற்பை ஏற்று சொற்பொழிவாற்றினார். அக்கூட்டத்தில் சுவாமிஜியின் உரையை ஆழ்ந்து செவிமடுத்த இளைஞன் சிவயோகன் (பிற்காலத்தில் யோகச்சுவாமிகள்) "விடயமோ மிகவும் பெரியது நேரமோ மிகவும் குறைவு (THE TIME IS SHORT AND THE SUBJECT IS LARGE) என்ற அந்த உரையின் முதல் வரிகளை சுவாமிஜியின் பாணியிலேயே திரும்பத்திரும்பக் கூறி பக்தர்களை மகிழ்வித்ததுண்டு என்பர் .

அந்த உரையில் சுவாமிஜி, "மற்ற யுகங்களில் செய்யத்தகுந்த கடினமான தவங்களும் யோகங்களும் இந்த கலியுகத்தில் பயன்தராது என்றும் இப்போது செய்ய வேண்டியது தானம் மட்டுமே. அதிலும் தானங்களிலே மிகச் சிறந்தது ஆன்மீக ஞானத்தை தருவதாகும். அதற்கு அடுத்தது, பௌதீக அறிவைத் தருவது. அதற்கு அடுத்தது, துன்பத்தில் காப்பது. கடைசியாக வருவது, உணவும் நீரும் தருவது. சுருக்கமாக கூறினால் ஆன்மீகதானத்திற்கு கீழ் தான் உயிரை காப்பது போன்ற மற்ற தானங்களின் மதிப்பு வருகின்றது என்றும் செயல்முறை ஆன்மீகத்தின் உன்னத எடுத்துக்காட்டுக்களான மகான்கள் சாதித்தது அதிகம்" என்றும் வலியுறுத்தியிருக்கிறார்.

இப்படிப்பட்ட உன்னத எடுத்துக்காட்டாய் தவத்திரு யோகசுவாமிகளின் தவ வாழ்க்கை அமைந்தது. தமது ஒப்பற்ற ஆன்மீக பலம் மற்றும் தீர்க்கதரிசனத்தால் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் பின்னால் வரப்போகும் பெரும் அழிவை முன்னரே ஞானக்கண் கொண்டு அறிந்து போரின் தாக்கத்தால் ஒரு வாய்க்கஞ்சிக்கு வழியின்றி அல்லலுறப்போகும் மக்களுக்காக தையல் நாயகித்தாயிடம் உருகி உருகி முன்னரே பிராத்தனை செய்தமை, அனைவரின் சார்பாக " நல்லூரான் பாதமே தஞ்சமடி!" என்று அஞ்சுவது யாதொன்றும் இல்லை என்ற அப்பர் பெருமான் பாணியில் அபயமளித்ததமை, மொத்தத்தில்,இப்போழிவிலும் நல்லூர் கந்தசுவாமி கோயில் போன்ற ஆன்மீக பொக்கிஷங்கள் எதிர்கால சந்ததியினருக்காக காக்கப்பட்டதென்றால், அதற்கு தவத்திரு யோகசுவாமிகள் போன்ற மகான்களின் பிராத்தனை பலமும் ஆசிகளுமே மூலக்காரணம் என்றால் மிகையாகாது. இதையே சுவாமி விவேகானந்தரும் தானங்களில் சிறந்தது ஆன்மீக தானம் என்றார்.

இப்படி நமது சமயமும் பண்பாடும் அழியாமல் தமது தீர்க்கதரிசனத்தால் காக்கப் பாடுபட்ட தவத்திரு யோகசுவாமிகள் போதித்த சாரமான தத்துவங்களை அர்த்தமுணர்ந்து வாழ்வில் பின்பற்ற முயல்வோமாக. மேன்மைமிகு இம் மகானின் பெயர்தாங்கிய இத் திருவடி நிலையத்தின் ஆன்மீகப்பணி மேன்மேலும் சிறக்கவேண்டும் என்ற பிரார்த்தனையை பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் என்ற தெய்வ திருமூவரின் பாதகமலங்களில் சமர்ப்பித்து அமைகின்றேன்.

மிக்க நன்றி.

இப்படிக்கு
அன்னையின் பணியில்

பிரவ்ராஜிகா ஆத்மதேவப்ராணா (signature)
ப்ரவ்ராஜிக ஆத்மதேவப்ராணா
செயலாளர்
இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக்கிளை).

RAMAKRISHNA SARADA MISSION
(LANKA BRANCH)
(Incorporated by Act No. 1 of 2012)
52/1, Vivekananda Road,
Colombo-06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சிவயோகநாதன் திருவடிச் சேவை
பவங்கள் பலவற்றைப் பாறச் செய்யுமே”

- சிவசிந்தனை

திருவடிக் கலப்புற்று திருவடி வடிவில் வீற்றிருக்கும் சிவயோகத் திருவடியை, வாழ்த்தி வணங்கி வளரும் அடியவர் பலர் நாடெங்கும் உள்ளனர். அவர்களுள் கொழும்பு மாநகரில் வாழும் அன்பாளர் பலரும் ஒன்றுகூடி ஆயிலிய நாள் ஆதியவற்றை அநுட்டித்து வருகின்றனர்.

அவர்களுக்குத் தாம் நாடோறும் கூடி சுவாமிகளைப் பூசிக்க வேண்டும் என்ற உளக் கருத்து இருந்தது. அவர்களது கருத்துக்கு இசைய சுவாமிகள் திருவுளம் பற்றினர் போலும். எதிர்வரும் நல்லூர் தேர்த்திருவிழா ஆயிலியம் கூடிய நன்னாளில் சுவாமிகள் கொழும்பு மாநகரில் தக்கதோர் தலத்தில் கோயில் கொள்கிறார்.

சுவாமிகள் கொழும்பு திருவடி நிலையத்தில் கோயில் கொள்ளும் இந்த மங்கலத்தில் சுவாமிகளது வாழ்த்துப்பா ஒன்றினாலே வாழ்த்துவதில் சிவதொண்டன் சபையினர் மகிழ்ச்சி அடைகின்றனர்.

வாழ்க சிவனடி வாழ்க சிவனடி
வாழ்க சிவதொண்டன்

பல்வினை போக்கி நல்லருள் ஆக்கி
பல்குக சிவதொண்டன்

பாழ்செயும் மாயா காரியம் அகல
பணிசெய் சிவதொண்டன்


பக்தர்கள் எல்லாம் பாட ஆடப்
பரவுஞ் சிவதொண்டன்

ஊழ்வினை போக உள்ளொளி ஓங்க
உயர்க சிவதொண்டன்

உண்மை முழுவதும் என்றுரை செய்யும்
ஒருவன் கழல்வாழ்க

-நற்சிந்தனை

சிவதொண்டன் சபையார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு,புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

## சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு டி.எம். சுவாமிநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி



*"கும்பிடுவார் தம் மனத்தைக் கோயிலாய்க்*
*கொண்டருளும் எம்பெருமான் திருவடியை*
*இறைஞ்சவா என்மனமே"*

என்று போற்றிய சிவயோகசுவாமிகளின் நினைவாக தலைநகரிலே கட்டப்பட்ட சிவயோகசுவாமி திருவடி நிலையக்கட்டிடத் திறப்பு விழாவினையொட்டி வெளியீடு செய்யப்படுகின்ற விழாமலருக்கு எனது வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் ஒரு சிறு குடிலில் வாழ்ந்த யோகர் சுவாமிகள் "ஞானி என்பவன் தான் எல்லோரையும் போல் என்றிருக்கவேண்டும்" என்று அருளியவண்ணமே வாழ்ந்துகாட்டியவர். அவரிடம் சொல்போலே சொல்லுறுதியும் இருந்தது. தன்னுயிர்போல் எவ்வுயிரும் என எண்ணி எல்லோரும் நலமுடன் வாழவழிகாட்டினார்.

அவர் போதனைகளை, நற்சிந்தனைகளை தமக்கான போசணையாகக் கொண்ட அவர் பக்தர்கள் இன்று கொழும்பிலே மிகப்பெரிய கட்டிடமமைத்து சுவாமிகளது திருவடிவழிபாடாற்ற முனைவது பாராட்டிற்குரிய விடயமாகும்.

எமது நாட்டிலே பிறந்த ஒரு சித்தரை பெருமைப்படுத்தும் விதமாக அவர் பெயரில் அமையப்பெற்ற இக்கட்டிடம் பல நல்ல கருமங்களுக்கு நிலைகளனாக அமையவேண்டுமென்று வாழ்த்துவதோடு, சிவயோகசுவாமி நம்பிக்கை நிதியத்தினரின் பணியும் சிறக்க வாழ்த்துகின்றேன். கட்டிடத்திறப்பு விழாவும் சிறப்புமலரும் நன்கமைய எல்லாம்வல்ல எம் ஆசான் சற்குரு யோகசுவாமிகளின் திருவடிகளைத்துதித்து அமைகின்றேன்.

**டி.எம், சுவாமிநாதன்**
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணியாளரின் வாழ்த்துச் செய்தி.



சிவயோகசுவாமி நம்பிக்கை நிதியத்தினால் கொழும்பில் கட்டப்படுகின்ற புதிய சிவயோகசுவாமி திருவடிநிலையக் கட்டிடத் திறப்பு விழாவினையொட்டி வெளியிடப்படுகின்ற "திறப்பு விழா மலரிற்கு" எனது வாழ்த்துச் செய்தியைப் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

"அகரமாம் எழுத்துப்போல அனைத்திலும் கலந்து நின்றே

இகபரம் இரண்டு மீந்த எழிற்குரு திருத்தாள் வாழ்க"

என்று தான் கண்டு அனுபவித்த கழலடியினைப் போற்றினார் சிவயோகசுவாமிகள். அதேபோல யோகர்சுவாமிகளின் திருவடியை எந்நேரமும் துதித்து அவர் உபதேச வழி நடக்கும் சிவயோக சுவாமி நம்பிக்கை நிதியத்தினர் சுவாமிகளின் பெயரால் திருவடி நிலையத்தைக் கட்டியுள்ளமை பாராட்டிற்குரிய விடயமாகும்.

இலங்கையின் தலைநகரான கொழும்பிலே இத்தகைய சமயம் சார்ந்த சமூகப்பணியாற்றும் பொது ஸ்தாபனம் ஆழவேரூன்றுவது எமது சமயத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய சொத்தாகக் கருதுகின்றேன்.

சுவாமிகள் சிவத்தொண்டு புரியத் தொடங்கிய ஆரம்பநாளிலிருந்தே தம்மை நாடி வந்தோரின் மனத்துயரங்களை போக்கும் நன்மருந்தாய் இருந்தார். அதேபோல "இடுக்கணெனக்கில்லை நின் செயலே யாவும் நடுக்கமெனக்குண்டோ நவில்" என்று சுவாமிகளின் திருவடியை அரணாகக் கொண்டு சிவயோகசுவாமி நம்பிக்கை நிதியத்தினர் பணியாற்ற வேண்டுமென்று வேண்டுகின்றேன். சிவயோகசுவாமி திருவடி நிலையம் அனைவருக்கும் தண்நிழலாய் விளங்கள வேண்டுமென்று வாழ்த்துவதோடு திறப்பு விழா மலரும் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அ.உமாமகேஸ்வரன்

பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துசமய அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

| நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் | தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| Chairman of the Board of Trustees | President: | Hony. General Secretary: | Hony. Treasurer: |
| வி. கயிலாசபிள்ளை | கந்தையா நீலகண்டன் | சிங்காரம்பிள்ளை தில்லைநடராஜா | வே. கந்தசாமி |
| *V. Kailasapillai* | *Kandiah Neelakandan* | *Singarampillai Thillanadarajah* | *V. Kandasamy* |
| *Phone: 2575566 (Res)* | *Phone: 2580807 (Res)* | *Phone: 2363021 (Res)* | *Phone: 2586620 (Res)* |
| *Fax: 2575472* | *2371100 (Off) - Fax: 2371111* | *Mobile: 071-8676498* | *Mobile: 071-5349150* |
| *hariomak@gmail.com* | *neels@mnlaw.lk* | *ndsvai@gmail.com* | *vkandasami@gmail.com* |


## வாழ்த்துச் செய்தி



உருவங்களைக் கடந்த இறைவன் மனிதர் குலத்தைப் புனிதப்படுத்துவதற்காகக் காலத்துக்குக்காலம் மானிட உருவில் காட்சி தருகிறார் என்பது ஐதீகம். அவ்வாறு இறைவனின் தோற்றமாக மிளிர்ந்தவர் தான் யாழ்ப்பாணத்துச் சித்தர் **சிவயோக சுவாமிகளாவார்**.

ஆரம்ப காலத்தில் அரசசேவையில் இணைந்திருந்தாராயினும் அக்காலத்திலேயே தியானம், திருமுறைபாராயணம் போன்ற ஆன்மீக நெறிகளை மேற்கொண்டார். தனது முப்பதாவது வயதில் அரச சேவையை விட்டு விலகி முழுமையாக ஆன்மீக நெறியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அப்போது தனது குருவாகிய செல்லப்பா சுவாமிகளின் ஞான உபதேசத்தைப் பெற்று சிவத்தொண்டு, சிவத்தியானம், நற்சிந்தனைகள் போன்ற ஆன்மீக நடவடிக்கைகளால் மக்களை ஆன்மீக ரீதியாகவும், சமயப்பற்றாளர்களாகவும் வாழ வழி சமைத்தார். தனது பக்தர்களால் "நல்லூரை நனைக்க ஞான வெள்ளம்" எனப்போற்றப்பட்ட சுவாமிகளின் நினைவாக இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் சிவதொண்டர் நிலையங்கள் அமைக்கப்பட்டு அவர்தம் சீடர்களால் குருபூசை, திருத்தொண்டு, தியானம் போன்ற அறநெறி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வகையில் வெள்ளவத்தை, இல. 53, விவேகானந்த வீதியில் அமைந்துள்ள *"சிவயோக சுவாமிகளின் திருவடி நிலையம்"* குறிப்பிடத்தக்கதாகும். ஆரம்பத்தில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சுவாமிகளின் குருபூசை தினத்தை நடாத்திவந்த திருவடி நிலையத்தினர், தமது பணியைப் படிப்படியாக வளர்ச்சிபெறச் செய்து இன்று தமது சொந்தக் கட்டடத்தைப் பூர்த்திசெய்து, திறப்பு விழா நடத்துவதை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

எமது சமய போதனைகளின்படி ஆண்டவனைத் தொழுவதுடன் அவனின் பூரண அருட்கடாட்சத்தைப் பெற்ற முனிவர்கள், சித்தர்கள் போன்றோரை தரிசிப்பதும் அவர்களின் பணிகளை முன்னெடுப்பதும் ஆண்டவன் தொண்டாக நோக்கப்படுகிறது.

அவ்வகையில் சிவயோக சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசையை முன்னிட்டு கடந்த 2014ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தால் வெளியிடப்பட்ட **"இந்து ஒளி"** ஆன்மீகச் சஞ்சிகையானது **"சிவயோக சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை சிறப்பிதழ்"** ஆக வெளியிடப்பட்டதை இங்கு குறிப்பிடவிரும்புகின்றேன். அதில் சிவயோக சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு, அவரின் நற்சிந்தனைகள், சிவதொண்டு தியானம் என்றவாறு பல

தலைமையகம்: இல.91/5, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 02, இலங்கை.
Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.
தொ.பேசி/Phone: 2434990 www.hinducongress.lk தொ.நகல்/Fax: 2344720
hinducongress@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)


| | | | |
|---|---|---|---|
| நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் | தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
| **Chairman of the Board of Trustees** | **President:** | **Hony. General Secretary:** | **Hony. Treasurer:** |
| வி. கயிலாசபிள்ளை | கந்தையா நீலகண்டன் | சிங்காரம்பிள்ளை தில்லைநடராஜா | வே. கந்தசாமி |
| *V.Kailasapillai* | *Kandiah Neelakandan* | *Singarampillai Thillanadarajah* | *V. Kandasamy* |
| *Phone:2575566 (Res)* | *Phone: 2580807 (Res)* | *Phone: 2363021 (Res)* | *Phone: 2586620 (Res)* |
| *Fax : 2575472* | *2371100 (Off) - Fax : 2371111* | *Mobile: 071-8676498* | *Mobile: 071-5349150* |
| *hariomak@gmail.com* | *neela@mnlaw.lk* | *uduvai@gmail.com* | *vkandasami@gmail.com* |


கட்டுரைகள், ஆக்கங்கள் என்பவற்றை புத்திஜீவிகள், சமயப் பெரியார்கள், பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் ஆகியோரிடமிருந்து பெற்று பிரசுரித்திருந்தோம். கடந்த 07.03.2014 மற்றும் 10.04.2014 ஆகிய தினங்களில் சிவயோக சுவாமிகளின் 50வது குருபூசை விழாக்கள் முறையே பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும், நல்லூர் துர்க்கா மணிமண்டபத்திலும் இந்து மாமன்றத்தினால் கொண்டாடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 07.03.2015ந் திகதி **"யோகர் சுவாமிகளின் ஆன்மீக நெறிப்படுத்தல்"** என்னும் தலைப்பில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் **சிந்தனைக் களம்** ஒன்றும் மாமன்றத்தினால் நடாத்தப்பட்டது. இதில் ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார். அகில இலங்கை இந்து மாமன்றம் 60வது ஆண்டு நிறைவு கண்டபோது, எம்மால் வெளியிடப்படும் ஆன்மீக இதழான இந்து ஒளியில் சுவாமிகளின் சிறப்புப் பற்றிய அத்தியாயம் ஒன்றையும் குறிப்பிட்டிருந்தோம். இவ்வாறு அகில இலங்கை இந்து மாமன்றமும் சுவாமிகளின் அருளொளியை இலங்கையில் மட்டுமல்லாது கடல்கடந்தும் பரப்பிவருகின்றது என்பதை துணிந்து கூறமுடியும்.

காலத்தின் தேவையறிந்து இத்திருவடி நிலையம் நிர்மாணிக்கப்பட்டு அதன் திறப்பு விழாவுக்கு ஒரு மலரினை வெளியிடுவது மகிழ்ச்சி தருவதுடன், இம்மலரை வெளியிட பங்களிப்புச் செய்த நல் உள்ளங்கள் அனைத்தையும் வாழ்த்துவதோடு திறப்பு விழாவும் இம்மலர் வெளியீடும் சிறப்புற நிறைவேற மாமன்றத்தில் கோயில் கொண்டருளும் ஸ்ரீ சிவகாமியம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமானை வணங்கி நிற்கின்றேன்.

**"சிவயோகர் சேவடிகள் பேற்றி! போற்றி!!**

"ஒரு பொல்லப்புமில்லை"
"முழுவதும் உண்மை"
"எப்பவோ முடிந்த காரியம்"
"நாமறியோம்"

என்றும் இறை பணியில்
கந்தையா நீலகண்டன்
தலைவர்
அகில இலங்கை இந்து மாமன்றம்


தலைமையகம்: இல.91/5, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 02, இலங்கை.
**Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.**
தொ.பேசி/Phone : 2434990 www.hinducongress.lk தொ.நகல்/Fax : 2344720
hinducongress@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம்
எண்-75, லோரன்ஸ் வீதி,
கொழும்பு - 04.

Eelaththu Thiruneri Thamil Manram
No. 75, Lorenz Road,
Colombo - 04.

" பொய்கண்டார்காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ"

09/08/2016

சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியத்தினால் சற்குரு சிவயோக சுவாமிகளுக்கு ஒரு நிரந்தரக்கட்டிடம் அமைப்பதற்கு வேண்டி பெருமுயற்சி எடுத்தார்கள். முதலிலே அவர்கள் ஒரு இடத்தை எண். 53, விவேகானந்தா வீதி, வெள்ளவத்தையில் வாங்கினார்கள். அந்த இடத்திலே ஒரு சிறிய வீடு இருந்தது. அந்த வீட்டைத்திருத்தி அதிலே மாதந்தோறும் வருகின்ற ஆயிலிய பூசையைச் செய்துவந்தார்கள். யோகர் சுவாமிகளுடைய குருவருளினாலே அந்த இடத்திலே ஒரு நிரந்தரக்கட்டிடம் அமைப்பதற்காக அத்திவாரம் இடப்பட்டு பின்பு கட்டிட வேலை தொடங்கியபடியால் சுவாமிகளுடைய ஆயிலிய பூசை மாதந்தோறும் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் இல்லத்தில் எண். 05, மூர் வீதி, வெள்ளவத்தையில் நடைப்பெற்று வந்தது.

கட்டிட வேலை முடிவுற்று சுவாமிகளுடைய குருவருளினாலே கட்டிடத்திறப்பு விழாவையொட்டி வெளிவருகின்ற மலருக்கு ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றத்தின் சார்பில் ஒரு ஆசிச்செய்தி கொடுப்பதற்குக்கிடைத்தது ஒரு பெரும் பாக்கியமாகக்கருதுகிறேன்.

மேலும் யாழ்ப்பாணம் கொழும்புத் துறை சிவயோக சுவாமிகளது குருபூசையைச் செய்ய எமது மன்றம் 29-03-1988 தொடக்கம் பொறுப்பேற்றது. பின்னர் 1990ஆம் ஆண்டிலிருந்து மாதாந்த ஆயிலிய பூசையையும் நடாத்தி வந்தது. இப்பொறுப்பை 1993 ஆம் ஆண்டில் சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியம் ஏற்றுக்கொண்டது. அதன் பின்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாதாந்த ஆயிலிய பூசை நடைபெற்று வந்தது. அப்பொழுது சுவாமிகளது பூசை வழிபாட்டில் அன்பர் சிவசுப்பிரமணியத்துடன் சேர்ந்து கூடுதலாகப் பங்கு பற்றி வந்தேன். பின்பு ஆயிலிய பூசை விவேகானந்தா வீதி திருவடி நிலையத்துக்குச் சென்ற பின்பு அடியேன் பங்குபற்ற முடியாமையிட்டு மனம் வருந்துகிறேன்.

மேலும் இத் திருவடி நிலையம் ஒன்று சுவாமிகளது பெயரால் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று முழுமூச்சாக நின்று உழைத்த சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதிய உறுப்பினர்கள் அனைவருக்கும் குறிப்பாக அதன் தலைவர், செயலாளர், உதவிச் செயலாளர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலை ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றத்தின் சார்பாகத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி!

"வாழ்க சுவாமிகளது நாமம்"
"வளர்க அவர்களின் பெருமை உலகமெல்லாம்"

மன்றத்தின்
சேவையில்
சி. கணேசன்
சி.கணேசன்
செயலாளர்.

President :
S.Thiyagarajah
Tel :2582597

Secretary :
Sivaguru Ganeshan
Tel : ~~2761600~~

Treasurer :
Mrs.Y. Mahesan
Tel: 2582195



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகள் குருதரிசனம்

-கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம்

"அறிவின் முழுமையை நோக்கிய பயணத்தில் மனிதகுலம் சென்று கொண்டிருக்கிறது. இந்தப் பணயத்தை ஊக்குவிப்பதற்காக ஆங்காங்கே அந்தந்தக் காலகட்டத்தில் மகான்கள், ஞானிகள், என்போர் தோன்றினார்கள், தோன்றுகிறார்கள், இனிமேலும் தோன்றுவார்கள்" என்று மொழிந்தார் சுவாமி விவேகானந்தர்.

மனித சமுதாயத்தில், மனிதர்கள் ஒவ்வொருவரும், ஓர் உறுப்பினன் ஆவான். மனிதர்கள் தனித்து வாழமுடியாதவர்கள்; குழுமமாகவோ, சமூகமாகவோ வாழ்பவர்கள். பிறரில் தங்கியும், பிறரைத் தாங்கியும்; வாழவேண்டியவர்கள். ஏனையோருடன் ஒத்தும், முரண்பாடுகள் இன்றியும்; ஒருவருக்கொருவர் உதவியும் நல்லுறவு பேணியும் வாழும் போதுதான், வாழ்வில் மகிழ்ச்சியும், அமைதியும் இனிமையும் அமையும். அவ்வாறு மனிதர்கள் சமூதாயத்தில் ஒத்தும், உதவியும்; முரண்பாடுகளைத் தவிர்த்தும்; மனித உறவுகள் நலம், காத்தும், ஓம்பியும் வாழ்வதற்கு; ஒழுக்க நெறிகள், கட்டுப்பாடுகள், விதிமுறைகள், நீதிநெறிகள் என்பனவற்றை அறிந்திருத்தலும், வாழ்வில் பின்பற்றி ஒழுகி வருதலும் இன்றியமையாதன.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்; நிற்க அதற்குத்தக," என்பது வள்ளுவர் வாய்மொழி. கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு ஐயந்திரி பறக் கற்றுத் தேர்ந்த பின்னர், பெற்ற அறிவுக்குத் தக்கவாறு, நெறியில் நின்று ஒழுக வேண்டும் என்பது இக் குறட்பா தரும் கருத்து ஆகும். கற்றல், கற்றபடி நிற்றல், இவ்விரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றன. ஒரு பக்கம் சிதையினும், நாணயம் அதன் பெறுமதியை இழந்து விடுகிறது. அவ்வாறே, கற்றல், நிற்றல் எனும் கல்வியின் இருபக்கங்களில் ஒன்று செயற்படாவிடினும், மனிதன் தன் பெறுமதியை, மதிப்பை இழந்து விடுகிறான். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானும், "கல்விக்குப்பயன் அறிவு, அறிவுக்குப் பயன் ஒழுக்கம்," என்னும் மகாவாக்கியத்தை, நமக்கு வழங்கியுள்ளார்.

தொன்று தொட்டு, அறியாமையில் மூழ்கியிருந்த மக்களுக்கு, அறிவொளிபாய்ச்சி; அவர்களின் புன்னெறியதனில் செல்லும் போக்கினை மாற்றி; நன்னெறியதனில் செல்வதற்கும்; வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கும்; அவற்றின் பயனாகத் தனிமனித அமைதி, குடும்ப அமைதி, சமுதாய அமைதி பேணப்படுவதற்கும்; வாழ்க்கை நெறிகள், முறைகள் என்பவற்றை அமைத்து, வழங்கியவர்கள், முனிவர்கள், இரிஷிகள், அறிவர்கள், மகான்கள் ஆவர். இந்தச் சான்றோர் வரிசையில் சித்தர்கள் என்போரும் இடம் பெறுகின்றனர்.

சித்தர்கள் என்போர் ஞானியர்கள் ஆவர். முக்காலமும் உணர்ந்த மகாஞானிகள்; சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் சித்தர்கள். இவர்களின் வழி, ஞானவழி, எனவே, இவர்கள் சிவஞானச் செல்வர்கள். இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில், ஒரு சித்தர்பரம்பரை தோன்றி வளர்ந்துள்ளது. கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், சிவயோக சுவாமிகள் ஆகியோர் யாழ்ப்பாணத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்து, சிவம்பெருக்கி, அறம் வளர்த்து, அருளாட்சி புரிந்து, மனித ஈடேற்றத்துக்கு மக்களை வழிப்படுத்தி வந்த பெருஞ்சித்தர்கள் ஆவர். இவர்கள் யாழ்ப்பாணத்துச் சித்தர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

இலங்கையைச் "சிவபூமி" என்று அழைத்துச் சிறப்பிதவர், ஆதிச்சித்தரான, திருமூலர் நல்லூர்த் தேரடி, அற்புதங்கள் நிகழ்ந்த "முருகபூமி". யாழ்ப்பாணத்துச் சித்தர் பரமபரையினருக்கும், நல்லூர்த் தேரடிக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. சிவபெருமானே, சித்தர் பரம்பரையைத் தொடங்கி வைத்த முதல் சித்தன். சிவனும், முருகனும் வேறல்லர்; ஒருவரே என்பது கந்தபுராணம் தரும் செய்தியாகும். முதல் சித்தனான சிவனார் மைந்தனும் நல்லூர் வாசனுமாகிய முருகப் பெருமானின் திருவடிகளை மறவாத சிந்தையர், இந்த யாழ்ப்பாணத்துச் சித்தர்கள். அவர்கள் வாழ்ந்து, உலாவி ஞானமழை பொழிந்தது, நல்லூர்த் திருப்பதியில் ஆகும். நல்லூர்த் தேரடி, அவர்களின் மூலஸ்தானம் ஆக விளங்கியது.

யாழ்ப்பாணத்து கடையிற் சுவாமியார், நல்லூர்ச் செல்லப்பா சுவாமியாரின் ஞானகுரு ஆவார். நல்லூத் தேரடியில் வாழ்ந்த செல்லப்பாச் சுவாமியார்; சிவயோகர் சுவாமிகளின் ஞானகுரு ஆவார்.

## சிவயோக சுவாமிகள்: வாழ்வும் வளமும்

யாழ்ப்பாணக் குடா நாட்டில், மாவிட்டபுரம் என்னும் பதியிலே, ஆயிரத்து எண்ணூற்று எழுபத்திரண்டாம் ஆண்டு (1872) மே மாதம் இருபத்தொன்பதாந்திகதி, திங்கட்கிழமை, அதிகாலை 3.30 மணியளவில், அவிட்ட நட்சத்திரத்தில் அம்பலவாணர், மற்றும் சின்னாச்சியம்மையார் தம்பதியினருக்கு அருந்தவப் புதல்வனாக, சிவயோக சுவாமிகள் அவதரித்தார். கருவிலே திருவுடையர் ஆக, விளங்கிய அந்த மகானுக்குப் பெற்றோர் இட்ட பெயர், சதாசிவம் என்பதாகும். தந்தையார் கொழும்புத்துறையைச் சேர்ந்தவர்; மஸ்கேலியாவில் வியாபாரம் செய்து வந்தவர்.

சிறு வயதிலேயே, தந்தையை இழந்துவிட்ட சதாசிவம்; தந்தையின் தம்பியார் சின்னையா என்பவருடன், அவரின் வீட்டில்; மாமியார் ஒருவரின் அரவணைப்பில், கொழும்புத்துறையில் வாழ்ந்து வரலானார். சின்னையா, சதாசிவத்தை யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூாயில், ஆங்கில மொழி மூலக் கல்வி கற்க உதவினார்.

சின்னையா கிறீஸ்து சமயத்தைச் சார்ந்தவர்; யோசெப் என்னும் பெயரைப் பெற்றிருந்தார். கிறீஸ்து சமயச் சூழலில் வாழ்ந்து வந்த, சதாசிவம்; யோகநாதன் என்னும் பெயரால் அழைக்கப்படலானார். கத்தோலிக்கப் பெயர் யோன் என்பதாகும். யோகநாதன், மாணவனாக இருக்கும் போதே, அதி விவேகியாக விளங்கினார். தாம் கற்றவற்றைச் சகமாணவர்களுடன் பகிர்ந்து கொள்வார். அவர்களின் சந்தேகங்கள் அனைத்தையும், ஓர் ஆசிரியரைப்போல, நிவர்த்தி செய்து வந்தார். எனினும், குடும்ப நிலைமை காரணமாக, அவரால் தமது படிப்பைத் தொடர முடியவில்லை. தாம் சுயமாக உழைத்து வாழவிரும்பினார். அதனால், பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்தி விட்டு, தொழில் ஒன்றைத் தேடலானார்.

அரச சேவையில்; கிளிநொச்சி, நீர்ப்பாசத்திணைக்கள அலுவலகத்தில்; பண்டசாலை பொருட்காப்பாளராக நியமனம் பெற்றார். அவ்வேளை, கிளிநொச்சியில் அமைந்துள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணை மடுக்குளத்துத் திருத்த வேலைகள், பிரவுண் என்னும் ஆங்கிலேயப் பொறியியலாளர் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. யோகநாதன் இரணைமடுவில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை, நேர்மையாகவும், கடமையுணர்வோடும் ஆற்றி வந்தார்.

உத்தியோகத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில், அன்மீக நாட்ட முடையவராய்; அகத்துட்சென்று, தன்னையறிவதில் ஆர்வமுடையவராய்; தன்னிறைவு அடையும் ஆன்மீக முயற்சிகளில் ஈடுபாடு கொண்டிருந்தார், யோகநாதன் தமக்கென ஞானகுரு ஒருவரைத் தேடலானார். புராண இதிகாசங்கள், சைவத்திருமுறைகள் மற்றும் சாத்திர தோத்திர நூல்களை இயன்றளவில் ஓய்வு நேரங்களில் கற்றுணர்ந்தார். யோகநாதன் உலகியல் நாட்டங்களிலிருந்து படிப்படியாகத் தம்மை விடுவித்துக் கொண்டு; ஞானத்தேடலில் அர்ப்பணிப்புடன் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். இதற்கு, அரச உத்தியோகம் தமக்கு ஒரு தடையாக இருக்கும் என்பதைத் தெரிந்து கொண்டு, அதனையும் பரித்தியாகம் செய்தார். இரண்டு படகுகளில் கால்களை வைத்திருத்தல் மிகுந்த ஆபத்தானது என்பதை யோகநாதன் அறிந்திருந்தார்.

இந்நிலையிலேயே, யோகநாதன், தான் தேர்ந்து கொண்ட குருநாதனைத் தரிசிப்பதற்குக் காலம் கனிந்தது; திருவருள் கூட்டி வைத்தது. கொழும்புத்துறைக்கு மீண்டார். அங்கு திருஞானசம்பந்தர், மற்றும் இராமலிங்கர் என்போர் வாயிலாக, நல்லூர் செல்லப்பாச் சுவாமிகளின் அருமை பெருமைகளைக் கேட்டறிந்த யோகநாதன், செல்லப்பாச் சுவாமிகளின் குருவருளைப் பெறுவதற்காகத் தவம் இருந்தார்.

## குருவருளும் திருவருளும்:

பொய்மையைத் தவிர்த்து; மெய்ம்மையை, மெய்ப்பொருளை யுணர்ந்து, அதன் வழி ஆன்மீக வாழ்வினைத் தொடர்பவர்கள் சித்தர்கள் ஆவர். “சித்தன் போக்குச் சிவன் போக்கு” என்பர். சித்தர்கள் சிவம் பெருக்குபவர்கள். அன்பே சிவம், அறிவே சிவம், நீதியே சிவம், உண்மையே சிவம். நன்மையே சிவம், ஆனந்தமே சிவம்.

மெய்ப்பொருள், அறிவாகவே உள்ளது. அந்தப் பேரறிவைத் தம் அறிவால் அறிந்தவர்கள்; அறிந்து தெளிந்தவர்கள், சித்தர்கள். “சித்” என்பதன் பொருள், அறிவு. அறிவின் தெளிவுதான் ஞானம். சித்தர்கள் என்போர் ஞானியர் ஆவர். அவர்கள் அறிவறிந்தவர்கள்; அதனால் மெய்ப்பொருள் உணர்ந்தவர்கள்; நவையறு காட்சியர்; மாசறு சாட்சியர் அகமலர்ச்சி பெற்றவர்கள். அவர்கள், நல்வினை, தீவினையாகிய இருவினைகளும் நீங்கப் பெற்றவராய்; இறையருளாலே வீடுபேறு அடையப்பெறுகின்றனர். சித்தர்கள் இவ்வுலகில், தம் உடல் மற்றும் கருவி கரணங்களோடு, தூல நிலையில் வாழும் போது சீவன் முத்தர் ஆகவும்; முத்தி நிலையில் முத்தர் ஆகவும் மரணமிலாப் பெருவாழ்வு அடையப் பெறுவர். இந்நிலையை அடைவதற்குக் குருவருளும் திருவருளும் தேவை.

குருவருள் மூலமே திருவருள் கைவரப்பெறும், எனச் சைவ சாத்திர நூல்கள் கூறும். குருவருள், திருவருளுடனும் அதன்வழிச் சிவம் என்னும் பரம் பொருளுடனும், பரிபக்குவம் அடைந்த ஆன்மாவை, ஐக்கியப்படுத்துகிறது. சித்தர்நெறி குருபரம்பரை வழியாகவே, வளர்ச்சி பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு தரிசனம்:

கிளிநொச்சியிலிருந்து, விடுமுறையில், கொழும்புத்துறைக்கு வருகை தந்த யோகநாதன்; தான் குருவாக வரித்துக் கொண்ட செல்லப்பாச் சுவாமிகளைத் தெரிசிப்பதற்கு; அவர் வாழ்ந்து வந்த நல்லூர்த் தேரடிக்குச் சென்றார். அவருடன் திருஞானசம்பந்தர் மற்றும் இராமலிங்கர் ஆகியோரும் சென்றிருந்தனர்.

நல்லூர்த்தேரடியில், யோகநாதன், குருநாதனைக் கண்டதும், தன்னை மறந்தார், தன் நாமம் இழந்தார்; தலைப்பாட்டார் தம் குருவின் தாள்கள் என்னும் தூய நிலையினை அடைந்தார். காந்தம், இரும்புத் துண்டினை ஈர்த்தது போன்ற ஓர் உள்ளுணர்வு குருநாதனுக்கும் சீடனுக்கு மிடையே ஏற்பட்டது. யோகநாதன் தமது குருநாதனால் ஆட்கொள்ளப்பட்ட போது, தமக்கு ஏற்பட்ட அதிர்வு, மனோநிலை பற்றி; அவரே தமது "குரு தரிசனம்"; "ஆசானைக் கண்டேன்" – நற்சிந்தனைப் பாடல்களில், உள்ளம் உருகி, மனம் திறந்து விளக்கியுள்ளார்.

"ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்
பேசாதன வெல்லாம் பேசினான் - கூசாமல்
நின்றேன், நீ யாரடா என்றே அதட்டினான்
அன்றே யான் பெற்றேன் அருள்"

"மலைத்து நின்ற என்னை மனமகிழ நோக்கி
அலைத்து நின்றமாயை அகலத் - தலைத்தலத்தில்
கைகாட்டிச் சொல்லலுற்றான் கந்தன் திருமுன்றில்
மெய்ம்மறந்து நின்றேன் வியந்து."

இவ்வாறு தன்னை மறந்து, மலைத்து நின்ற யோக நாதனை நோக்கி, செல்லப்பாச்சுவாமிகள் கூறிய அருள்வாசகங்கள், சீடனின் செவியில் உரமாக ஒலித்தன. அவற்றை நற்சிந்தனைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

"கருத்தில் நினைந்துருகிக் கைகூப்பும் மெய்யடியார்
வருத்த மெலாந்தீர்க்கும் வடிவேல் - திருத்தலத்தில்
தேரடியிற் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்.
ஆரடாநீ யென்றான் அவன்."

"தன்னை யறியத் தவமியற்றும் மாதவரை
அன்னையைப்போல் ஆதரிக்கும் ஆறுமுகன் - சந்நிதியில்
தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடா உள் என்றான் சிரிந்து"

"வண்டு பண் செய்யும் வளம் பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் - கொண்டுவரும்
தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தீரடா பற்று என்றான் சிரித்து"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“குரு தரிசனம் கோடி புண்ணியம்,” என்பர். கோடிபுண்ணியங்கள் செய்த ஆத்மாக்களுக்கே, சற்குரு கிடைக்கப்பெறுவர். “தவமுந் தவமுடையார்க் காகும்.” என்பது வள்ளுவர் வாக்கு.

குரு தரிசனத்தின்போது, செல்லப்பாச்சுவாமிகளின் திருவாயிலிருந்து மலர்ந்தருளப் பெற்று, சீடன் யோகநாதனின் செவியில் ஒலித்தவை: “ஆரடாநீ?” “தேரடா உள்” “தீரடா பற்று”, என்னும் மிகுந்த பொருள் நிறைந்த ஞானமொழிகள் ஆகும்.

“நான்யார்?, என்ற வினா, ஞானத்தேடலின் ஈடுபட்டுள்ளவர்கள், தம்மைத்தாமே கேட்டு, உணரப்படவேண்டிய முதல் வினாவாகும். “நான் இந்த் உடம்பா?; உயிரா? மனமா?; “புத்தியா?”; “சித்தமா?” என்ற வினாவுக்கு, யோகசுவாமிகள் குருவருளால் கண்டறிந்த விடை, “நான் உடம்பன்று, மனம் அன்று, புத்தியன்று, சித்தமன்று; நான் ஆத்மா” என்பதாகும்.

“நான் யார்?” என்ற வினாவுக்கு, விடையை ஆராய்ந்து பெறுவதற்கு, ஒருவர் தம் உள்ளே சென்று, அகத்தில் தேடவேண்டும். இதையே, “தேரடா உள்”, என்ற ஞானவாக்குக் குறிக்கின்றது. உள் சென்று தேடிக் கண்டு பிடிக்க வேண்டுமாகில், அதற்கு முதற்படியாக, பற்றுக்கள், பாசத்தளைகள், என்பவற்றை ஒழித்தாக வேண்டும். இதைத்தான், “தீரடா பற்று; என்ற ஞானவாக்குப் புலப்படுத்துகின்றது. அதற்குரிய வழிமுறையைத், திருவள்ளுவர் பின்வரும் குறட்பா மூலம் அறிவிக்கின்றார்.

“பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு” – திருக்குறள்.

உலகப் பற்றுக்களை விட்டொழிப்பதற்கு வாய்ப்பாகப் பற்றற்றவனாகிய இறைவனை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும் என்பது, இக்குறட்பா தரும் கருத்து ஆகும்.

வியப்புற்று நின்ற சீடனை கிடைக்கப் பெற்று விட்ட அகமகிழ்வுடன்; நோக்கிய குருநாதன், “உன்னைத்தான் காண எதிர்பாத்துக் காத்திருந்தேன்; உனக்கே பட்டஞ்சூட்டப் போகிறேன், வா, வா” என்று யோகநாதனைத் தம் அருகில் அழைத்து, அரவணைத்து, அருளும் பொருளும் நிறைந்த அறிவுரைகளைச் சீடனுக்கு உபதேசித்தருளினார். குரு என்பவர் அஞ்ஞானத்தை நீக்குபவர்; மெய்ஞ்ஞானத்தை அருளுபவர். இவ்வரிய, காணற்கரிய கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு, அங்கு சூழ நின்றவர்கள் வியந்து மகிழ்ந்தனர்.

“ஒரு பொல்லாப்புமில்லை”; “எப்பவோ முடிந்த காரியம்; “எல்லாம் செப்படி வித்தை”; “நாமறியோம்”; “முழுவதும் உண்மை”; அப்படியே உள்ளது”, “ஒருவருக்கும் தெரியாது”; “ஆர் அறிவார்”; இவை செல்லப்பாச் சுவாமிகளின் மகா வாக்கியங்கள். செல்லப்பாச் சுவாமிகள் தாம் உதிர்த்த வாக்கியங்களுக்கு அருள் கொடுத்தார், அவரின் சீடர், யோகசுவாமிகள் அவற்றிற்குப் பொருள் கொடுத்தார். தமது நற்சிந்தனைப் பாடல்கள் வாயிலாக, மகாவாக்கியங்களின் அருமை பெருமைகளை உலகத்தவர்க்கு உணர்த்தினார். அவ் அருள் ஞானவாக்குகள் உலகெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன; என்றும் வாழும் சிரஞ்ஜீவித்துவம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எட்டிலும் எண்பதிலும்"

திருமதி பராசக்தி சுந்தரலிங்கம் சிட்னி

சுவாமியைப் பற்றி அவருடைய அடியவர்கள் எத்தனையோ நூல்களை எழுதியுள்ளார்கள். "என் நெஞ்சில் இடம் கொண்ட ஒரு பெரியார்" அவற்றுள் என்னை மிகவும் ஈர்ந்த நூல்களுள் ஒன்று. இந்த நூலை அடிக்கடி வாசிப்பது எனது வழக்கம். இதனை எழுதியவர் திரு.வைரமுத்து என்னும் பெரியார், உங்களிலே பலருக்கும் அவரைத் தெரிந்திருக்கும். அவருடைய இந்த நூலையும் வாசித்திருப்பீர்கள். இவர் சுவாமியுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை மிகவும் சுருக்கமாக இந்தச் சிறிய நூலிலே கூறுகிறார். கொழும்பிலே அவர் வேலை பார்த்துக் கொண்டு இருந்த போது ஒரு முறை நண்பர் ஒருவர் சுவாமியைப் பற்றி இவரிடம் கூறுகிறார். சுவாமியை இவருக்குத் தெரியாது ஆனால் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். யாழ்ப்பாணத்திற்குச் சென்ற போது சும்மா பார்ப்போம் என்று கொழும்புத்துறைக்குச் செல்கிறார். விடியற்காலையிலே தனது காரிலே சென்று சுவாமியின் ஆச்சிரம வாசலிலே இறங்கிச் செல்கிறார்.

"யாரது வைரமுத்துவா வா" என்ற குரலைக் கேட்டு திடுக்கிட்டுப் போகிறார். முன்பின் தெரியாத தான் வருவதை சுவாமி எப்படி அறிந்திருந்தார் என்பது அவருக்கு அதிசயமாக இருந்தது. "படலை திறந்துதான் இருக்கிறது" "கதவு நிலையில் தலையை மோதிக் கொள்ளாதே குனிந்து வா" என்று சுவாமி தனது கொட்டிலுக்குள் அழைக்கிறார். இவரும் அவர்பால் ஈர்க்கப்பட்டு அவரைப் பயபக்தியுடன் வணங்குகிறார். சுவாமி தியானத்தில் அமர்ந்து விடுகிறார். திரு.வைரமுத்து என்னும் பெரியாரும் தன்னை அறியாமலே அதில் ஒன்றி விடுகிறார் விடை பெறும் போது "நீ சும்மா பாக்கத்தானே வந்தனீ அப்ப போயிற்று வா" என்கிறார் சுவாமி. அன்றுமுதல் இவருக்குச் சுவாமியின் மீது மிகுந்த மதிப்பும் பக்தியும் ஏற்படுகிறது. அவரது அனுபவங்களை இந்தச் சிறிய நூலிலே எங்களுடன் பகிர்ந்துள்ளார். இவர் தனக்காக ஒன்றுமே கேட்டதாகத் தெரியவில்லை. சுவாமி அவ்வப்போது கூறும் சில வசனங்கள் அல்லது வார்த்தைகள் இவரின் மனதிலே பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன, அவற்றைப் பற்றியே இந்த நூலிலே எழுதுகிறார். இந்த நூலிலே எட்டாவது அதிகாரத்திலே வரும் ஒரு பகுதியை உங்களோடு நானும் பகிரலாம் என்று நினைக்கிறேன். அதனை ஆசிரியரின் சொற்களிலேயே தருகிறேன்.

இதுதான் இந்தப் பகுதியின் தலைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டிலும் எண்பதிலும்

ஒருநாள் சுவாமி மிகவும் கவலையோடு காணப்பட்டார்.

என்னை உட்கார வைத்துவிட்டு சிறிது நேரம் ஒன்றும் பேசாது தலையைக் குனிந்து கொண்டு இருந்தார். நிமிர்ந்ததும்

"எட்டு வயதிலே சீலை தோய்க்கவும் செம்பு மினுக்கவும் தொடங்கியவர்கள் எண்பதிலும் அதைத்தானே செய்கிறார்கள்"

என்று பரிதாபத்துடன் தனக்குள்ளே பேசிக்கொள்வதுபோல் மிக மெல்லச் சொன்னார், சொல்லிவிட்டு திரும்பவும் மௌனத்தில் ஆழ்ந்துவிட்டார். வழக்கமாக அவரிடம் காணப்படும் குதூகலமான பேச்சும் மலர்ந்த முகமும் அன்று காணப்படவில்லை. அவர் சொன்ன வாக்கியத்திலிருந்து அவரின் உள்ளக்கவலை யாழ்ப்பாண மக்களின் போக்கைக் குறித்து எழுந்ததென்பதை நான் ஊகித்துக் கொண்டேன். சுவாமி எழுந்தார்.

"நீ வா பின் சந்திப்போம்" என்று சொல்லிக் கொண்டு வெளியேறினார். அன்று வெகுதூரம் சிந்தனையில் ஆழ்ந்துகொண்டு நடந்திருப்பார் என்று நினைக்கின்றேன். யோகசுவாமிகளின் குரு செல்லப்பா சுவாமிகள் சரி, சிவயோக சுவாமிகள் சரி மனக்குழப்பம் ஏற்படும் நேரத்தில் மிக விரைந்து 20, 30 மைல் தூரம் நடப்பது வழக்கம் என்று கேள்விப்பட்டிருந்தேன். சுவாமிகள் சொன்ன வாக்கியத்தை மனத்தில் இருத்திக் கொண்டு வீடு திரும்பிய நான் அதைப்பற்றி சிந்தியாமல் இருக்க முடியவில்லை. சுவாமிக்கு இவ்வளவில் சஞ்சலத்தை உண்டாக்கிய விஷயத்தை எப்படி மறக்க முடியும். அவரின் உள்ளக்கிடக்கையின் எதிரொலியாக வெளிவந்த வாக்கியத்தில் எவ்வளவு உண்மை பொதிந்திருந்தது.

ஏறக்குறைய நூற்றுக்குத் தொண்ணூறுறொன்பது வீதம் மக்களின் சமயம் வெளிவேடத்திலேயே தொடங்கி வெளிவேடத்திலேயே முடிந்து விடுகிறது. சீலை தோய்ப்பதிலும் செம்பு மினுக்குவதிலுமே சமயம் தங்கியிருப்பதாக எண்ணி விடுகிறார்கள். எந்த வழிபாடும் உள்ளத்தூய்மையை வளர்க்கவும் இறையன்பைப் பெருக்கவும் உதவவேண்டும். இவற்றை அடைவதற்கான ஆரம்பப்படிதான் சுவாமிகள் கூறிய "சீலை தோய்ப்பதும் செம்பு மினுக்குவதும்" ஆகிய வெளி ஆசாரங்களும் கிரியைகளும். உள்ளம் சம்பந்தப்படாது உடம்பினால் மாத்திரம் செய்யப்படும் வழிபாட்டினால் யாது பயன்? ஒருவேளை அது தேகாப்பியாசமாக இருக்கலாம். வழிபாடு என்பது மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றினாலும் செய்யப்படுவது பஞ்சாட்சரத்தை ஓதுவதனால் நன்னெறி கைகூடும் என்பதில் ஐயமில்லை, ஆனால் அதை ஓதும் முறையை திருஞானசம்பந்தர் இப்படிப் பாடுகிறார்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" ஓத வேண்டும் என்கிறார். காதலாகிக் கசிதல் உள்ளத்தில் நிகழ்வது, கண்ணீர் மல்குதல் உடம்பில் காயத்தில் நிகழ்வது, ஓதுதல் வாக்கில் நிகழ்வது. இவை மூன்றும் ஒன்றித்து நிகழ்ந்தால் பெறப்படும் பயன்தான் நன்னெறி ஆகும். அன்றியும் கிளிப்பிள்ளை போல் வாயினால் மாத்திரம் எத்தனை முறைதான பஞ்சாட்சரத்தை செபித்தாலும் நன்னெறியாகிய பயன் இல்லை. வைத்தியன் சொன்ன மருந்தை விதிப்படி உட்கொள்ளாது அதன் பெயரை ஆயிரத்தெட்டு முறை செபித்தாலும் நோய் மாறுமோ? வழிபாட்டில் முக்கியமாகச் சம்பந்தப்பட வேண்டியது மனம், உள்ளம் இப்படி அவர் தொடர்ந்து பல உதாரணங்களை சொல்லிக்கொண்டு போகிறார். சுவாமி கூறுவது எங்களுக்கும் பொருந்தும். நாங்கள் சாதாரண மனிதர் தானே, நாங்கள் சாமி கும்பிடும்போது குளித்து தூய ஆடை அணிந்து சுவாமிப்படத்துக்கு ஒரு பூவை வைத்து தேவாரம் பாடி வழிபடுவோம். எங்களிலே பலரும் இப்படிச் செய்வது வழக்கம். வெள்ளிக்கிழமை என்றால் சொல்லவே வேண்டாம். ஊரிலே என்றால் வீடு வாசல் கழுவுவதும் விளக்குகளை மினுக்குவதும் என்று வீடு ஆரவாரப்படும், இப்படிச் செய்யும் போது மனதிலே தூய்மையான உணர்வு ஏற்படுகிறது, புனிதமான நினைவுகள் வருகின்றன. புறத்தூய்மை அகத்தூய்மைக்கு எங்களை அறியாமலே எங்களைக் கொண்டு செல்கிறது. இதை நாங்கள் மறுக்க முடியாது. எங்களுடைய சமயத்திலே அவரவர் விரும்பியபடி கும்பிடலாம். ஒருவிதமான கட்டுப்பாடுகளும் இல்லை. எங்கள் சமய வழிபாடு வயதுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற முறையிலே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்காகப் பிரிக்கப்பட்டிருக்கிது. சரியையிலிருந்து படிப்படியாக கிரியை, யோகம், ஞானம் என்று உயர்ந்து உயர்ந்து செல்லும்படி எங்கள் வழிபாடு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் எங்களுக்கு எந்த வயதிலும் சரியையும் கிரியையும் தேவையாகத்தானே இருக்கிறது. இன்று நாங்கள் இங்கே கூடி இருந்து இந்தப் பூசையில் ஈடுபடுவது கூட சரியை கிரியை வழிபாடுதானே. இப்படிச் செய்யாதே என்று சுவாமி சொல்லவில்லை. இதோடு நின்று விடாதே என்றுதான் சொல்கிறார். அங்கேயே நின்று விடாதீர்கள் முன்னேறுங்கள். சரியை கிரியையில் இருந்தபடியே யோகத்தையும் ஞானத்தையும் பின்பற்றிக் கொள்ளுங்கள் என்றுதான் சொல்லுகிறார். Man must Evolve Spiritually என்பதுதான் சுவாமியின் வேண்டுகோள் சுவாமி விபுலானந்தருடைய பாடலொன்று நினைவுக்கு வருகிறது. இந்தப் பாடலை சிறுவயதிலே படித்திருக்கிறோம். ஈசன் உவக்கும் இனிய மலர் மூன்று

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவும் அல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த் தொடையோ
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர் மலர்த் தொடையுமல்ல
கூப்பிய கை காந்தளடி கோமகனார் வேண்டுவது

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரில் இல்லாக் கற்பகமோ
வாட்டம் உறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் பொற்கொன்றையுமல்ல பாரில் இல்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது

தூய உள்ளமாகிய தாமரைப்பூவையே ஈசன் விரும்புகிறான்.
ஈசனை நோக்கிக் கூப்பிய கைகளாகிய காந்தள் மலர்களையே அவன் விரும்புகிறான்
ஈசனையே அன்போடு பார்க்கும் கண்களாகிய நெய்தல் மலர்களையே அவன் விரும்புகிறான்.
இறைவனை வழிபடுதவதற்கு இந்த மூன்று மலர்கள் போதும் என்கிறார் சுவாமி விபுலானந்தர்.
இப்படிப்பட்ட ஞானிகளைப் பெற உண்மையிலே நாங்கள் கொடுத்து வைத்தவர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதுவும் இதுவும்

“பேச்சு மூச்சற்ற பேரின்ப வெள்ளமுற்று
நீச்சு நிலை காணாமல் நிற்கும் நாள் எந்நாளோ”

தாயுமான சுவாமிகள்.

பேச்ச மூச்சற்ற பேரின்ப வெள்ளத்தில் மூழ்கி நின்றது அது.
நல்லூரான் தேடியில் மௌனித்திருக்கும் பின்
மாலைப்பொழுதில் கதைத்துப் பேசிச் சிரித்து மகிழும்
அது பித்தன் விசரன் என்று அறிவீனர் எண்ணி நகையாடினும்
எள்ளவும் பொருட்படுத்தாது நல்லூரானுடன்
சிரித்துப் பேசி அவனுடன் தோழமை யோகத்திலிருக்கும்
இப்பேறு பெற்ற அது வட்டுக்கோட்டையில்
பெரும் பாக்கியம் செய்த வல்லிபுரம் பொன்னம்மா
தம்பதிகள் பெற்ற தவப்புதல்வன்.

ஆறுமுகனுடன் உறவாடி மகிழும்
வட்டுக்கோட்டையில் பிறந்த அது
எங்கள் மாவிட்டபுரத்தில் பிறந்த இதை
தன்னோடு சேர்த்துக் கொண்டது.
அது சொன்னதுபோல் “எப்பவோ முடிந்த காரியம்
எதனால் உந்தப்பட்டு இது நல்லூரான் தேரடியைச் சென்றடைந்தது”

ஓதாதே வேதம் உணர்ந்த பேரறிவாளன் அது
“யாரடா நீ என்று அதட்டினான்
அன்றே யான் பெற்றேன் அருள்” என்று இது சொல்லித் திரிந்தது எங்கும்.

இது வந்ததைக் கண்டதும் அது “நல்லதப்பா நான்
உன்னைப் போன்ற ஆளைத்தான் பார்த்துக்கொண்டிருந்தேன்”
என்றதிலிருந்து இருவருக்கும் முற்பிறப்புப்
பிணைப்பிலிருந்தது உள்ளங்கை நெல்லிக்கனி.

அது ஒரு மகா ஞானி. இது உடலைத் தானென்று
எண்ணும் பருவத்தில் இருந்தது.
சமைத்த உணவை சட்டியுடன் கொட்டி
“இப்பொழுது இதற்குச் சாப்பாடு எதற்கு”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சீறும். அது கேட்ட இது
சிந்திக்கும் "உணவு இத்தேகதிற்குத்தானே
நான் தேகமில்லையே. நான் ஆத்மாவன்றோ"

ஆத்மாவின் உணவு மனப்பாக்கியம் அன்றோ"
என்ற ஞானம் பெற்றது இது.
செய்முறையால் அது இதற்கு ஞானம் கற்பித்தது
தேரடியிலுள்ள வில்வ மரத்தடியில் மௌனித்திருக்கும் அது.

மௌனம் கலைந்து திருவாய் திறந்தால்
வசை மொழிகளே வெளிவரும். அந்த
மகாஞானி வசைபாட, அஞ்ஞானிகளும்
அதை நோக்கி வசைமொழி பாட மக்கள்
வேடிக்கை பார்ப்பார்கள்.

இது கொழும்புத்துறை இலுப்பவேரிலிருக்கும்.
தியானம் செய்யும். வெய்யில் மழை பார்க்காது.
அம்மையார் ஒரு சிறு குடில் கொடுக்க
இது அதைத்தான் ஆச்சிரமமாக்கியது.

இதுவும் அதுவும் சேர்ந்தால் ஒரே
அட்டகாசம்தான். இது பசியால் துடிக்கும்
அது பார்த்துச் சிரிக்கும். இரண்டு சதம் கொடுத்து "பிட்டு வாங்கித்தின்" என்று சொல்லும்.
அது இதற்கு ஊட்டிய மகா வாக்கியங்கள் நான்கு.

ஒரு பொல்லாப்புமில்லை
எப்பவோ முடிந்த காரியம்
முழுவதும் உண்மை
நாம் ஒன்றுமறியோம்

சகல சௌகாரியங்களுமுள்ள புவனத்தைப்படைத்த
கூத்தனவன் மனிதனைப் படைத்து நன்கு வாழ வைத்தான்.
அதையே ஒரு பொல்லாப்புமில்லை என அது மொழிந்தது.
"முழுவதும் உண்மை" என்று சொன்னது ஏன்?
அது கண்ட அநுபவ வார்த்தைகள் அவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமின்றி முழுதும் உண்மை எனத் தெரியும். அதன் வாக்கு
எப்பவோ முடிந்த காரியம்.

•

பிரபஞ்சத்தைப் படைக்கும்போது இது இது இப்படி
இருக்க வேண்டும் என்று யாவையும் கடவுள்
செய்து விட்டார். அதனன்படியே யாவும்
நடந்தது. நடக்கிறது, நடைபெறும். நாம் அறியோம்.
எமது சிற்றறிவுக்கேற்பவே சில விடயங்களை அறிவோம்.

அது மகாஞானி வேதம் ஓதாதே உணர்ந்தது.
அது இதை
"யாரடா நீ, தேரடா உள்ளே"
"தீரடா பற்று" என்று அதட்டியது.
அன்றே தன் சற்குருவை அறிந்தது இது.
குருவின் செம்பொற்பாதம் சிரமிசைச் சுமந்தது.
Chris Dyer என்னும் மேற்கத்திய
எழுத்தாளன் All that happened, is happening
and will happen as orchestrated by an
unseen hand என்றார்.

அது சொன்ன "எப்பவோ முடிந்த காரியம்"
என்பதை உறுதிப்படுத்துகிறதல்லவா?
அவனின்றி ஓரணுவும் அசையாதல்லவா?
இதையே Leo Tolstoy என்னும் ரஷ்ய எழுத்தாளன்
"God without whose knowledge even a hair will not drop from a man's head" என்றார்.

இலுப்பை மரத்தடியில் இது தியானிக்கும்போது
அடிக்கடி அது வந்து பார்த்துப் போகுமாம்.
கல்லாமல் யாவுங் கற்ற அது போதித்ததை
இது நற்சிந்தனையுள் அடக்கிற்று.

"அக்குமணி அணி, அஞ்செழுத்தை ஓது,
நெக்கு நெக்குருகு" என்று ஊக்கப்படுத்தியது அது.
அதனுடைய நாமத்தைச் சொல்லச் சொல்ல இனிக்குமென்றது இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறந்தது தன் உத்தியோகத்தை இது.
நின்திருவடி சரணென்று கிடந்தது அதன் முன்னே

தேகமே மெய்யென்று வாழ்ந்த இது
குருவின் உபதேசம் பெற்று
உள்ளே தேடி, பற்றை நீக்கி, ஆன்மாவை உணர்ந்தது.

அரிய சாலங்கள் பல செய்து அது
தன்னை அறியப் பயிறசித்தது சீடனை.
சிந்தித்து சிந்தித்து அந்த ஞான தேசிகன் தன்னை
ஆன்ம சுகமடைய அருளியதை அறிந்தது இது.
"யாரடா நீ என்று அதட்டினான் அன்றே
யான் பெற்றேன் அருள்" என்பதை
உணர்ந்தது இது.

"உற்றார் பெற்றார் உடன்பிறந்தோரினும்
நற்தவத்தினரே நம் துணையாவார்"
என்ற உண்மையை அறிந்தது,
அதுவும் சரி, இதுவும் சரி சித்துக்கள் பல செய்தன.

அது ஐம்பத்தைந்து வயதிலே சமாதியடைந்தது.
அடியார்க்குத் தோன்றாத் துணையாயிருந்தது இது.
இது மகா சமாதியடைந்தது.
1964ம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் திகதி ஆயிலிய
நட்டசத்திரத்தில்.
அதுவும் இதுவும் ஆத்மாவின்
பயணத்தை முடித்துக் கொண்டனவா அன்றி
தொடர்வனவா?
யாரும் அறிந்திலர். யாம் அறியோம்.

ஆக்கம்: திருமதி திலகா விஜயரத்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# "திருவடி வழிபாடு"

பேராசிரியர், டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன்

மொழித்துறை சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

உலகச் சமயவரலாறு இறைவனது உண்மையான மெய்ப்பொருள் ஆகிய சிவனுடைய திவ்ய வரலாறேயாகும். அநாதியான, தொன்மையான, பிறப்பிறப்பற்ற, தோன்றிய காலம் எதுவென அறிய முடியாத, காலவரையறையற்ற கடவுள் சிவபெருமான் ஒருவரேயாம். இப்பேருண்மையே இன்று உலக வரலாற்றில் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். இயற்கையும், உலகமும் இயங்குவதற்கு மூலம் ஒரு மகா சக்தி. பேரருட்சக்தி, திருவருட்சக்தி, சைவசமயமே சமயம். சமய தத்துவத்தில் எத்தனையோ கிளைக் கொள்கைகள் தோற்றம் பெறுவது இயற்கையானதும் இயல்பானதுமாகும். ஆன்மீக வளர்ச்சியும் நிலைபேறும் நம்பிக்கையும், மாற்றங்களும் இயற்கையின் நியதி. கடவுள் இருப்பதையோ நிராகரிப்பதையோ உலகிற் காண்பதுண்டு. இது மனிதப் பெலவீனம். ஆயினும் நம்பிக்கை என ஒன்று ஒவ்வொரு உயிர்களிடத்தும் இருப்பதுதான் உலக விசித்திரம். இதனாலேயே சைவசமயம் உலகையும், உயிர்களையும், கடவுளையும் இணைத்துத் தத்துவம் பேசும். அத்தத்துவமே சைவசித்தாந்த தத்துவம், உலகிலே தோன்றிய எல்லாம் தத்துவங்களிலும் அநாதியானது – உண்மையானது – எளிமையான விளக்கமுடையது சைவசித்தாந்த தத்துவமாகும். சைவசித்தாந்த தத்துவத்திலே பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மை பேசப்படுகிறது. பதியின் தத்துவம் மிகமிக விரிவானது. அதன் விளக்கம் கூறி எல்லை கண்டுவிடமுடியாது: வரையறுத்துவிடவும் முடியாது. சைவசித்தாந்த தத்துவம் வெறும் ஏட்டுச்சுரக்காயல்ல: கற்பனையுமல்ல; மாயையுமல்ல. நடைமுறை வாழ்வியல் உண்மை. இயல்பான எளிய மார்க்கம். எவரும் கடைப்பிடித்தும், கைக்கொண்டும் ஒழுகி முத்திப்பேறு அடையவல்ல பயன்பாட்டைத்தரவல்லது. ஏனைய மதங்கள், சமயநெறிகள் பேசாதபொருள் முத்திப்பேறு. இதனையே விரித்தும் விளக்கியும் வியாக்கியானஞ் செய்தும் இன்றும் பெருமையுடன் இயங்குவது சைவநெறி: சனாதனசமயம் 'திருவடி' என்பதும் 'இறைவன்' என்பதும் 'சுவடு' என்பதும் 'பாதம்' என்பதும் 'மலரடி' என்பதும் 'புண்டரிகம்' என்பதும், 'செந்தாமரை மலர்ப்பாதங்கள்' என்பதும் சைவ சமய வழிபாட்டு முறையில், சிவயோக சுவாமிகள் வழிபாட்டு நெறியில் மிகமிக நீண்ட காலமாக அனுபவத்திலும், தேவார திருமுறைகளிலும், தோத்திரங்களிலும், மந்திரங்களிலும், கிரியைகளிலும் அன்றாடம் அறிந்து வழிபாட்டில் நிலைபெற்றுவரும் அம்சமாகும்.

'திருவடிகள்' பன்மை: ஒன்றுக்கு மேற்பட்ட பாதங்கள் என்று பொருள். 'கள்' விகுதி பெற்ற ஒரு சோடிப் பொருள் அது சடப்பொருள், பெரும்பாலும் மரத்திலானது. ஆயினும் சைவ வாழ்விலே கல்லும், மண்ணும், மரமும், இரும்பும் உயிருள்ள பொருட்கள். எப்படி இவற்றுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பும் உயிரும் கொடுக்கப்பட்டன என்பதே சிலரது கேள்வி. சமயக் கல்வியும், அனுபவப் பயனும் உடையவர்கள். ஆன்மிகத்தை வினாவுக்குட்படுத்தமாட்டார்கள். ஆயினும் தெய்வீக உண்மைக்கு அழிவில்லை. தமிழ்வடிவ வழிபாட்டு அன்புணர்ச்சி, பக்தியுணர்ச்சி, பாராயணம், பாரம்பரியப்பேணல், மன ஒருமைப்பாடு என்பனவற்றையே திருவடி வழிபாடு உறுதிப்படுத்துகின்றது. வளர்த்தெடுக்கிறது. மனம் பழுத்தல், மன அமைதி, மன ஒருமைப்பாடு, தியானம், அநுபூதி, கிரியா முறையின் மகிழ்ச்சி, கௌரவித்து ஆராதனை செய்வதன்மூலம் அன்பும், பக்தியும் சொரிவது. இதனால் வழிபடு பொருளோடு பேரிடுபாடு கொண்டு லயிப்பது – உணர்வொன்றுவது என்பதே திருவடி வழிபாட்டின் பெரும் பயன்கள்.

இவற்றையே சிவயோக சுவாமிகளின் திருவழிபாட்டிலே நாமும் கண்டு தெளிகின்றோம். திருவடிவழிபாடு – திருமுறை வழிபாடு – புராணவழிபாடு - இதிகாச வழிபாடு – ஆகம வழிபாடு – அன்பு வழிபாடு – பக்தி வழிபாடு - மூத்தோர் வழிபாடு – முதியோர் வழிபாடு – பெற்றார் வழிபாடு – குரு வழிபாடு – சமய குரவர் - சந்தான குரவர் வழிபாடு - பெரியபுராண அடியார்கள் வழிபாடு – பிதிர் வழிபாடு என்று தமிழ்ச் சைவமக்களது வாழ்வில் பன்முகப்பட்ட வழிபாட்டு நிலைகள் உள்ளன.

திருவழிபாடு, நீராட்டு நிலையிலே சிறப்புப் பெறுவதுடன்: தீபாராதனை, புஷ்பாஞ்சலி, பாராயணயம், படையல், பஜனைச் சிறப்புகள் உடையது என்பது சிவயோக சுவாமிகள் திருவழிபாட்டிலே எமக்குக் கிடைத்துள்ள அனுபவ உண்மைகள். இன்று தேவார திருமுறைகளை ஓதுவித்தோ, எழுதியோ படிக்கும் பிள்ளைகள், மக்கள் தொகை குறைந்து விட்டது. பரீட்சை நோக்கில் மட்டும் நடைபெறுவதாக அமைந்துள்ளது. ஆயினும் தமிழ் மரபிலும் சைவமரபிலும் அன்றாட பாராயணம், வழிபாடுகளிலே ஓதல், ஓதுவித்தல் என்பன நிகழ்கின்றன.

திருவடி வழிபாட்டில் அமைதியுண்டா? குழப்பமுண்டா? சத்தம் இடைஞ்சல் உண்டா என்று கேட்பது அபத்தம். பெரும்பாலும் மனம் அடங்கினால் மட்டுமே மனிதரிலே அமைதி. சாந்தம் உண்டாகும். நிம்மதி பிறக்கும். உள்ளம் பழுக்கும், அன்புணர்ச்சி பெருகும், பக்தி சிறக்கும், தெளிவும் பயனும் ஏற்படும், உலக நன்மை கிட்டும். திருவடி வழிபாட்டின் நோக்கம் அன்போடு இறைவனை நினைந்து போற்றி ஏத்தி வழிபடல்: மன அமைதி தேடி நிம்மதி பெறுதல்.

பால், தயிர், இளநீர், தண்ணீர் பஞ்சாமிர்தம், பன்னீர் ஆகியவை பயன்படுத்திச் செய்யும் நீராட்டு முறைமை சிவயோக சுவாமிகள் திருவடி வழிபாட்டிலே இடம் பெறுவது. படிப்பறிவினாலும், சமய நம்பிக்கையினாலும், அறியவேண்டும் என்ற தேடலினாலும் பொருள் புரிய வேண்டும். என்ற வேட்கையினாலே மட்டுமே அபிஷேகத்தின் பயன்கள் புரியலாம், அறியலாம், தெரிந்து தெளியலாம். 'போகம்' வேண்டின் தேனால் அபிஷேகம் செய்ய வேண்டும் எனபது ஆகம விதி. இவற்றை அனுசரித்தே 'திருவடி' வழிபாடுகள் நிகழ்கின்றன. மன அமைதி இதனால் உண்டாகின்றது. தெளிவும், ஆனந்தமும், அமைதியும், சாந்தமும் பிறக்கின்றன. இவை வேறெங்கும் அல்லது கடைகளிலே பணம் கொடுத்து வாங்க முடியாது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு மில்லை. காண்பதற்கும் கிடைக்காதவை. எனவேதான் திருவடி வழிபாடு அவசியமானது.

"நம் முன்னோர் அளித்த அருஞ் செல்வம்" திருவடி வழிபாடும், குருபூசைகளும்: பிரார்த்தனைகளும். பெரியவர்களது பண்பாட்டை பாரம்பரியத்தைப் பின்பற்றுவதே திருவடி வழிபாட்டின் மகத்துவம்; மகிமை: பெருமை: புகழ். தொன்மை நடைமுறையே மக்களின் பழைய – பெருமைமிகு வாழ்க்கை வழிபாட்டு மரபைப்பேணும் நெறியாகும். ஆதலால் திருவடி வழிபாடுகள் அடிக்கடி நிகழ வேண்டும் என்பது சமுதாயத்தைச் சமய வாழ்வில் ஈடுபடுத்துவதற்கு அத்தியாவசிமாகும். வழுவாது இயற்றப்பட வேண்டும்.

பழைய மகான்களை ஞானிகளை ஆன்மீகச் செல்வர்களை நீள நினைப்பது அவர் புகழ்பாடுவது; அவர் வரலாறு பேசுவது, அவரை வழிபடுவது என்பது இன்பமான காரியமாகும். கொழும்புத்துறை மகான் சிவயோக சுவாமிகளின் திருவடி வழிபாடு என்பது இன்று உலகளாவியது. மேற்குலகிலும் உலக அரங்கிலும் பெருமகிழ்ச்சியுடன் பெரு நம்பிக்கையுடனும் நிகழுவது. எனவே சகல நலன்களும் அருளவல்ல சிவயோக சுவாமிகளின் திருவடி வழிபாடு பற்றி என்னையும் ஒரு பொருளாக்கி எண்ணித் தொடர்பு கொண்டு இதனை எழுதுமாறு அன்புடனும் அருளுடனும் பணித்த சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியத்தினருக்கு நன்றியைத் தெரிவித்து சிவயோகசுவாமிகளது திருவடிகளையும் ஒரு சேர நினைத்து தொழுதிறைஞ்சி அனைவர்க்கும் திருவடி வழிபாட்டால் மேன்மைப் பயன்கள் கிடைக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் அழைக்கிறேன்.

முற்றும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நேசிக்கும் ஆத்மீக ஞானி சிவயோக சுவாமிகள்

பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணத்து: சித்தர் மரபில் ஒருவராகத் திகழ்ந்த சிவயோக சுவாமிகள் உலகளாவிய நிலையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் நேசிக்கும் அநுபூதிச் செல்வராக விளங்கியவர். இறைபக்தியும் குருபக்தியும் மிகுந்தவராகத் திகழ்ந்த சுவாமிகள் மக்களை ஆத்மீக நெறிக்கும் ஒழுக்கம் மிக்க நல்வாழ்வுக்கும் ஆற்றுப்படுத்திய தெய்வீக புருஷராவார். இக்காரணத்தால் காலந்தோறும் மன்றங்களும் சபைகளும் அப்பெருந்தகைக்கு விழா எடுத்து நினைவு கூர்ந்து குருபக்தியைச் செலுத்தி வருகின்றன. சுவாமிகள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராக விளங்கி சித்தர் பாரம்பரியத்தை உலகறியச் செய்த உத்தமராகத் திகழ்ந்தமை எமது நாட்டிற்கும் பண்பாட்டிற்கும் பெருமை தருவதாகும். அகிலமும் வியக்கும் வண்ணம் ஆத்மீக ஞானியாகவும் அநுபூதிச் செல்வராகவும் திகழ்ந்த சிவயோக சுவாமிகள் 1872ஆம் ஆண்டு வைகாசி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் அவதரித்தவர். 1964ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் ஆயிலிய நட்சத்திரத்தில் திருவடி கலப்புற்றார். எமது நாட்டிலே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, கொழும்பு, மலைநாடு ஆகிய இடங்களில் நடமாடிய சுவாமிகள் தம்மை நாடிவந்த அடியார்களையும் அன்பர்களையும் தமது ஆத்மீக நற்சிந்தனைகளாலும், அருளுரைகளாலும், அறிவுரைகளாலும், உபதேசங்களாலும் ஆத்மிக வாழ்வுக்கு ஆற்றுப்படுத்தியவர். சுவாமிககள் தீர்க்கமான ஆத்மீகப் பயிற்சியை அவர் போற்றிய குருநாதனாகிய செல்லப்பா தேசிகரிடம் பெற்றவர். "குருபரன் அடிஇணை ஏத்துதல் இன்பம்" என்ற நம்பிக்கையை அடியவர்களிடம் ஏற்படுத்திய பெருமை சுவாமிகளையே சாரும். இக்காரணத்தால் சுவாமிகளின் ஆத்மீக சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டவர்கள் எத்தகைய வேறுபாடும் பாராட்டாது அவரைத் தங்கள் குருவாகப் போற்றி வணங்கினார்கள். சுவாமிகள் மேற்கொண்ட சிவத்தொண்டினை சிவதொண்டன் நிலையம் தொடர்வது அவர் ஆற்றுப்படுத்திய ஆத்மீக வாழ்வுக்குப் பெருமை சேர்ப்பதாகும். சுவாமிகளைப் பற்றி உளமார அறியாதவர்களுக்கும், இளந்தலைமுறையினருக்கும், எதிர்காலச் சந்ததியினருக்கும், எவ்வெவ் வழிகளில் சமயவாழ்வு மேன்மையுற வழிப்படுத்தினார் என்பதைத் தெளிவுபடுத்த அவரது நற்சிந்தனைகள் உதவுகின்றன.

அறிஞர்களும் சமய சிந்தனையாளர்களும் சுவாமிகளின் ஆத்மீக வாழ்வின் சிறப்பினை அவரது சிந்தனைகளை மூலமாகக் கொண்டு தெளிவு படுத்தும் வகையில் பல நூல்கள் மூலமாகக் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்புகள் மூலமாகவும் போற்றி வருகின்றனர்.

சித்தர்கள் எனப்படுவோர் எத்தகையவர் என முதலில் சிந்திப்போம். புண்ணிய பூமி என்றும் ஞானபூமி என்றும் போற்றப்பட்ட பாரத நாட்டினைப் போலவே திருமூலரினால் சிவபூமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் போற்றப்பட்ட இலங்கையிலே சித்தர் பரம்பரை ஒன்று இருந்து வருகின்றது. சமயக் கொள்கைகள், கோட்பாடுகள், சமய சாஸ்திரிங்கள் விதிக்கும் சம்பிரதாயங்கள் ஆகியவற்றிற்கு அப்பால் சமயம் கடந்த சமரச மோன நிலையில் சித்தத்தைச் சிவன்பால் வைத்து யோக ஆற்றலினால் மனதை ஒருநிலைப்படுத்தி மெய்ப்பொருளாகி இறைவனை உள்ளத்தில் உணர்ந்து அநுபூதி பெற்ற மகாஞானிகளே சித்தர் எனப்படுகின்றனர். சமயாதீதப் பழம்பொருளை தமது உள்ளத்தில் கண்டு தெளிந்தவர்கள். இவர்கள் அட்டமா சித்தி கைவரப் பெற்றவர்கள். அத்தகைய அருளாற்றல் மூலம் செயற்கரிய காரியங்கள் செய்து தாம் பெற்ற அனுபவங்ளை மானிலம் பயனுற வாழ்வதற்குத் தமது அருளுப தேசங்களின் வழி மக்களை ஆற்றுப் படுத்தியதனால் அவர்கள் சித்தர்கள் என்ற பெயருக்குப் பொருத்தமாக வாழ்ந்து காட்டியவர்கள். சித்தர்கள் சமுதாயத்துடன் சேர்ந்தும் சேராமலும் வாழ்பவர்களாயினும் மனிதகுல மேம்பாட்டினையே தமது தீர்க்கதரிசனமாகக் கொண்டவர்கள். சிந்தை தெளிந்து இருப்பவரே சித்தர் என்றும் உலகமெலாம் சிவம் என அறிந்தோர் சித்தம் எனவும் அறிஞர் விளக்கம் தருவர். சித்தர்கள் பற்றிய விளக்கங்கள் பல்வேறு பரிமாணங்களில் அமைந்தாலும் யோகர் சுவாமிகள் பற்றி நாம் சிந்திக்கும் பொழுது அவருக்கேயுரிய சித்தர் மரபு சார்ந்த பண்புகள் மிளிரப் பெற்றவராகத் திகழ்ந்தார். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற பரந்த சமய நோக்கு, சமரச சன்மாக்க நெறி, எளிமை, உயிர்களிடத்தில் அன்பு, மனித நேயம், உள்ளொளியை ஒளிரச் செய்யும் அக வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளித்தல், ஆன்ம ஈடேற்றம், குருநெறி ஆகிய சமய, சமூக ஆன்மீக மேம்பாட்டினை தமது சொல்லிலும் செயலிலும் வற்புறுத்தும் ஒருவராக அவர் திகழ்ந்தார் எனக் கொள்வது பொருத்தமாகும். சுவாமிகளிடம் காணப்பட்ட ஒரு சிறப்பம்சம் எல்லோரையும் போன்று ஒருவர் என்ற எண்ணத்துடன் மக்கள் மத்தியில் வாழ்ந்தமையாகும். எனவே அவரைப் பலரால் உள்ளவாறு உணர்ந்து கொள்ள முடிவில்லை. ஆத்மீக நாட்டங் கொண்ட அவரது சிந்தனை, சொல், செயல் யாவும் தன்னை உணர்ந்து கொள்ளும் ஆத்மீகப் பயிற்சிக்கு உதவுவனவாக அமைந்தன. மெய்ப்பொருளாகிய இறைவனைக் காணும் இலட்சியமே அவரது உன்னத இலட்சியமாக அமைந்தது.

சுவாமிகள் கிளிநொச்சியில் பணிபுரியும் காலத்தில் ஒழுக்கத்தால் உறுதி பெற்ற வாழ்வு, கடவுள் பக்தி, ஞானியர் நாட்டம், நூற்பயிற்சி ஆகிய இயல்புகள் முதிர்ந்து ஆத்மீக வாழ்வு வாழ்வதற்கும் உபதேசிப்பதற்கும் தகைமையான ஒருவராய் மலர்ச்சி பெற்றிருந்தார். இவரது இந்த ஆத்மீக தகுதிப்பாட்டினைப் பிற சமயத்தவர் கூட இனங்கண்டு பாராட்டியுள்ளனர். இவரது இத்தகுதிப்பாட்டினைச் சுவாமிகள் அலுவலகத் தலைவராகப் பதவி வகித்த பிறௌனி (Browny) எனும் ஆங்கிலேயர் கூறிய வார்த்தைகள் எடுத்துக் கூறுகின்றன. "நீர் ஒரு தெய்வீக மனிதர்" (You are a God fearing man) எனத் தம்மை நோக்கிக் கூறியதாக சுவாமிகள் ஏனையோருக்குக் கூறியுள்ளார்.

மக்கள் யோகசுவாமிகளைப் பல்வேறு நிலைகளில் நேசித்தனர். அவரது அனுபவத் திறனுக்கேற்ப மக்களது மதிப்பீடு வேறுபட்டது எல்லாம் வல்ல வித்தகராக அதீத ஆற்றலினால் அற்புதங்கள் பல நிகழ்த்திய சித்தராகப் பார்த்த ஒரு அடியார் கூட்டம் அவரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ந்திருந்தது. மக்களில் பலர் சுவாமிகளின் ஆத்ம ஞானத் திறத்தால் தாம் விரும்பியவற்றைப் பெற்றுத் திருப்தியுற்றனர். சுவாமிகள். தனது தூய்மையான நற்சிந்தனைகள் வழி மக்களிடையே ஆத்மீக விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டார். ஓதியோதி உணர்வது தன்னையே, தவமியற்றி அறிவதும், நான் யார்? எனத் தன்னை அறிந்து மெய்ப்பொருளைக் காணும் சிந்தனையும் முயற்சியுடையவராகத் திகழ்ந்தார். நல்லூர்த் தேரடியில் ஞானதேசிகனான செல்லப்பரைக் கண்டதிலிருந்து படிப்படியாகத் தான்பெற்ற அனுபூதி நிலையினையும் தன்னுள் ஏற்பட்ட தெய்வீக மாற்றங்களையும் உலக மக்களின் நன்மை கருதி எடுத்துக் கூறினார். சுவாமிகள் சித்துக்கள் ஆற்றும் ஆற்றல் பெற்றவராயினும் அவர் பூரணத்தும் பெற்ற ஒரு மறைஞானியாக வாழ்ந்து சமய ஆத்மிக சமூக ரீதியில் மனிதகுலம் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து ஆத்மீக ஈடேற்றம் பெற வழி காட்டிய ஒரு ஞான குருவாகத் திகழ்ந்தார்.

குருபக்தியின் மகிமையை மக்கள் உணர்ந்து பயனடைய வேண்டுமென்ற நோக்கில் தான் அதற்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். சித்தர்பாரம்பரியத்தின் பரமகுருவாகத் திகழ்ந்த திருமூலர் குரு பாரம்பரியத்தின் மகிமையைப் போற்றிய வகையில் தமது குரு வழிபாடு மற்றும் குரு வார்த்தைகளை உன்னத உபதேசங்களாக ஏற்றல் ஆகிய நெறிகளில் தம்மை இணைத்துக் கொண்டார். 'குருவே சிவமெனக் கூறினன் நந்தி' என்ற வரிகளின் மூலம் திருமூலர் இறைவனே குரு எனச் சிறப்பிக்கின்றார். குருசீடனுக்குக் கூறும் வாசகமே உபதேசம். குரு உபதேசத்தால் அருட்கண் விழிப்படையும் என்ற காரணத்தால் திருமூலர் திருமந்திரத்தின் முதலாம் தந்திரத்தில் 'உபதேசம்' என்ற தலைப்பில் அதன் சிறப்பைக் கூறுகின்றார்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

என்ற இப்பாடல் சுவாமிகளின் ஆத்மீக வாழ்வில் உன்னதமான பயனைத் தந்தது. ஞான குருபரனாகிய செல்லப்பா சுவாமிகளுக்கும் யோகசுவாமிகளுக்கும் இடையே குரு சீட உறவு சிறப்படைந்தது. சுவாமிகள் தம் குருபரனாகிய செல்லப்பா சுவாமிகளை இறைவனாகவே கண்டார். ஆத்மீக வாழ்வு ஒருவனுக்கு செம்மையுற குருவின் வழிகாட்டல் இன்றியமையாதது என்பதற்கு சான்றாக சுவாமிககளின் குருதோத்திரப் பாடல்கள் சார்ந்ததாகவுள்ளன. செல்லப்பா சுவாமிகளின் சற்குரு தரிசனம் சுவாமிகளின் வாழ்வின் பெரும் பயன்களைத் தந்தன. செல்லப்பா சுவாமிகள் வழங்கிய உபதேசங்கள் அவரது நற்சிந்தனைப் பாடல்களுக்கு ஆதாரமாக அமைந்தன. செல்லப்பரின் வாக்கும் பார்வையும் யோக சுவாமிகளுக்கு ஆத்மீக பலத்தைத் தந்தன. நல்லூர்த் தேடியில் செல்லப்பரின் ஞான உபதேசங்களைப் பெற்றுக்கொண்ட யோக சுவாமிகள் தமது நற்சிந்தனைப் பாடல்களில் குருவின் சிறப்பையும் உயர்வையும் போற்றுகின்றார். குருநெறி நின்று ஆத்மீக மரபின் ஊற்றுக்களைக் கண்டறிந்து அம்மரபு உலகெங்கனும் பரவ வழிவகுத்தவர் சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது இந்த ஆத்மீகப் பணி மூலம் எதிர்காலச் சந்ததியினரின் ஆத்மீக வாழ்வு செம்மையுற குருவின் வழிகாட்டல் இன்றியமையாதது என்னும் உண்மையைத் தெளிவுபடுத்தியது.

இத்தகைய ஆத்மீக நல்ஞ்சார்ந்த குருசீட உறவு ஏற்படுவதற்குரிய தளமாக அமைந்தது நல்லூர் புனித பூமியாகும். இப்புனித பூமியில் கோயில் கொள்டெழுந்தருளி அடியார்கள் துயர் தீர்க்கும் முருகப் பெருமானின் திருவருட் சக்தி அதிசயமானது. முருகப் பெருமானின் திருவருட் சக்தி பரவியுள்ள இப்பூமியில் யாழ்ப்பாணதின் ஞானிகள், சமயச் சான்றோர்கள், சித்தர்கள் தமது ஆத்மீக சக்தியைப் பெற்றனர். யோக சுவாமிகளுக்கும் அவரது ஞான குருவாகிய செல்லப்பா சுவாமிகளுக்கும் நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடலில் வாழ்ந்தே மக்களின் ஆத்மீக வாழ்வு வளம் பெற ஞான ஒளி பரப்பினர். நல்லூர் தேரடி சித்தர் மரபு மேலோங்கும் புனித பூமியாயிற்று. சுவாமிகளும் தமது ஆத்மீக சிந்தனை வளம்பெற நல்லூர் கந்தனின் அருளைப்பெறும் வகையில் பக்திப் பரவசத்துடன் முருகப் பெருமானை தரிசிக்கும் வழக்கமுடையவரானார். இறைபக்தியும் குருபக்தியும் யோகசுவாமிகளின் ஆத்மீக வாழ்வு வளம்பெற உன்னத சக்திகளாக அமைந்தன.

இறைவனே செல்லப்பர் வடிவில் வந்து தன்னை ஆட்கொண்டார் என்பதனை,

இருவினையான் மதிமயங்கி இடர்பட்டுக் கிடப்பேனைக்
கருணையினால் ஆட்கொள்ளக் கடவுள்திருவுளங் கொண்டு
அருள்மேனி தாங்கி அவனியிலே வந்தானைத்
திருவாழும் நல்லைநகர்த் தேரடியில் கண்டேனே

என்ற பாடல் வரி தமது குருநாதர் தம்மை ஆட்கொண்ட அனுபவத்தைக் கூறுகின்றார். செல்லப்பா சுவாமிகள் வழங்கிய ஆத்மீக உபதேசம் பற்றி 'எங்கள் குரு நாதன்' என்ற பாடல் வழி நன்கு எடுத்துக்காட்டியுள்ளார் யோக சுவாமிகள்.

தேகம்நீ யல்லவென்றா னெங்கள்குரு நாதன்
　　சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
　　முத்திக்கு வித்ததென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
　　விண்ணும் மண்ணுமாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
　　சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள் குருநாதன்

என்ற பாடலில் தான் பெற்ற அகக்காட்சி அனுபவத்தை தெளிவுற எடுத்துக் கூறும் வகையில் மக்களுக்கும் ஆத்ம போதத்திற்கான வழியைக் காட்டியுள்ளார் யோகசுவாமிகள். குருநாதன் சிறப்பையும் அகக்காட்சி சிறப்பையும் இப்பாடல் வழி மக்கள் உணர முடிகின்றது. நல்லூரில் தான் ஆட்கொள்ளப்பட்ட முறையினை

ஆசானைக் கண்டேன் அருந்தவர்வாழ் நல்லூரில்
பேசா தனவெல்லாம் பேசினான் - கூசாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றேன்நீ யாரடா வென்றே யதட்டினான்

அன்றேயான் பெற்றேன் னருள்.

எனவும்

நல்லூரில் தேரடியில் நாம் கண்ட சிவயோகம்

சொல்ல முடியாத சுகத்தைக் காட்டிவிடும்

எனவும் குரு உபதேசத்தின் மேன்மையை மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார். 'ஆசான் அருள்' என்ற பாடலில் தமது ஆத்மிக அனுபவத்தின் மற்றுமொரு பரிமாணத்தைக் காட்டுகின்றார்.

ஆசான் அருளால் அகந்தை அழிந்தது

ஆசான் அருளால் அகங்கு ளிர்ந்தது

ஆசான் அருளால் அன்பு வளர்ந்தது

ஆசான் அருளால் ஆசானைக் கண்டிலன்

என்ற பாடல் வழி ஆசான் அருள் வழி பெறக்கூடிய பயன்களைக் கூறியுள்ளார். இவை உலக மக்களுக்கு நல்வழி காட்டக் கூடிய உபதேசங்களாக அமைந்தமையால் மக்கள் ஆத்மீக ஞானியாகிய யோக சுவாமிகளை மிகவும் நேசித்தனர்.

மனித குலத்திற்கே ஆத்மீகம் சம்பந்தமான அறிவு இன்றியமையாததொன்று என சுவாமிகள் பரிபூரணமாக உணர்ந்ததன் பயன்தான் நற்சிந்தனை. ஆத்மீகம் சம்பந்தமான அறிவுதான் பூரணமான மன நாகரிகமுள்ள மனிதனை உருவாக்குகின்றது. பரந்த மனப்பான்மை, சமபாவம், சமதரிசனம் முதலிய அரிய குணங்கள் எல்லாமே மனிதனுக்கு ஆத்மீக சிந்தனை மூலமாகவே உண்டாகின்றன. நல்லொழுக்கந்தான் ஆத்மீகத்தின் அடிப்படையாகும். நல்லொழுக்கத்தால் இதயம் தூய்மையடைகின்றது. இதயம் பூரணமாய்த் தூய்மையடையும்போது மனிதன் பக்குவ நிலையை அடைகின்றான். இத்தகைய உண்மைதனை உணர்ந்த யோக சுவாமிகள் மிகவும் தெளிவான சிந்தனை மூலம் மக்களை சமயஞ் சார்ந்த ஆத்மீக வாழ்வுக்கு வழிப்படுத்தியமை அவரை உலகம் புகழ் ஆத்மீக நேயம் மிக்க ஞானியாக பெருமைப்பட வைத்துள்ளது. இதற்காகவே அவரை உலகம் இன்றளவும் போற்றி வருகின்றது. சிறப்பாக யாழ்ப்பாணத்துச் சைவ மக்களுக்கும், தமிழகம், மலேஷியா, சிங்கப்பூர் மற்றும் மேற்குல நாடுகளில் வாழும் அன்பர்களுக்கும் ஆத்ம ஞானத்தைப் பரப்பும் ஞான குருவாகத் திகழ்ந்து வாழ்வில் உய்வு பெற வழிகாட்டிய பெருமை யோகசுவாமிகளையே சாரும். வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்வியலைக் காட்டித்தரும் வகையில் கடவுள் நம்பிக்கை, ஒழுக்கங்கள், இறை வழிபாடு, பிறவுயிர்க்கு இரங்குதல், மக்கள் சேவை, பெரியோரைப் பேணுதல், குருபக்தி, அறநூல்களைக் கற்று ஒழுகுதல், மௌன நிலைத் தியானம், ஆன்ம ஈடேற்றம் எனப் பல்வேறுப்பட்ட அருளுபதேசங்கள் மனுக்குலத்தை ஆத்மீக வாழ்வுக்கு வழிப்படுத்துவாக அமைந்தன.

யோக சுவாமிகளின் நற்சிந்தனைகளில் செல்லப்பா சுவாமிகளின் மகா வாக்கியங்கள் எனப் போற்றத்தக்க உபதேசங்கள் இழையோடியுள்ளன. அவ்வுபதேசங்களாவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருபொல்லாப்பு மில்லை

முழுவதும் உண்மை

எப்பவோ முடிந்த காரியம்

நாமறியோம்"

இவற்றைத் தாரக மந்திரமாகக் கொண்ட மந்திர மாலைகளும் யோகசுவாமிகளின் நற்சிந்தனையிற் செறிந்துள்ளன. இவற்றின் சிறப்புக்கருதி இவ்வாக்கியங்களை நூற்றுக்கணகான இடங்களில் எடுத்துக் கூறின்றார் சுவாமிகள். இச்சிந்தனைகளின் வெளிப்பாடாகவே சுவாமிகள் அன்பே கடவுள் எனப் போற்றி மனுக்குலம் அன்பினைப் பேணியும் போற்றியும் பயனடைய வேண்டுமென்பதே அவரது ஆன்மீக இலட்சியமாக விருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருமூலர் அன்பே சிவம் எனக் காட்டித்தந்த வழியும் அதுவேயாகும்.

அன்பே கடவுள் அன்பே யுலகம்

அன்பே உயிர்கள் அன்பே யனைத்தும்

அன்பே ஆவதும் அழிவதும் போலாம்

அன்பின் அதிசயம் ஆரறிவாரே

என்ற பாடல் வழி எல்லாவற்றையும் அன்பின் வடிவமாகக் கண்ட சுவாமிகள் அன்பு ஒன்றே சிவப்பேற்றுக்கும், சிவ சிந்தனைக்கும், நல்லொழுக்கத்திற்கும் வழிகாட்டும் என்பதனை அனைத்து மக்களுக்கும் தமது இச்சிந்தனை மூலம் அறிவுறுத்தியுள்ளதை சமகாலத்தில் வாழும் யோக சுவாமிகளின் ஆத்மீக அடியார்கள் எமது இளந்தலை முறையினர்க்கும் எடுத்துக் கூறுவது காலத்தின் கட்டாய தேவையாகும். இதுவே யோகசுவாமிகளுக்கு நாம் செலுத்தும் குரு காணிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது குருபரன் சிவயோகசுவாமி

திருமதி சசிகலா ஸ்ரீரஞ்சன்

சிவயோகசுவாமிகள் நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபகரான சோ.சண்முகசுந்தரத்தின் மருமகளான நான் அவரின் நெடுநாளைய ஆசையான கொழும்பில் எமது ஆசான் சிவயோக சுவாமிகளுக்கு ஒரு கட்டிடம் நிறைவேறியதற்கு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அவர் எங்களுடன் தங்கியிருந்த காலத்தில் நான் எங்கு வெளியில் சென்றாலும் தனக்கு ஒரு அதிஸ்டலாபச் சீட்டு (Sweep ticket) வாங்கி வரும்படி கேட்டுக் கொள்வார். அவரின் ஒரே நோக்கம் அதில் தனக்குப் பரிசு கிடைத்தால் அப்பணத்தைக் கொண்டு கொழும்பில் சிவயோக சுவாமிக்கு ஒரு மத்திய நிலையம் அமைப்பதாகவே இருந்தது. பிற்காலத்தில் அவரின் முழு ஆசையும், நோக்கமும் அதுவாகவே இருந்தது. அவரின் சீவிய காலத்தில் அவரின் விருப்பம் நிறைவேறாது போனாலும் அந்தக் கடமையையும் தொண்டையும் தனது மகன் ஸ்ரீ ரஞ்சனிடம் ஒப்படைத்துச் சென்றார்.

அவர் 2000ஆம் ஆண்டு தை மாதம் 29ம் திகதி காலை இறைவனடி சேர்வதற்கு முன்பு நடந்த நிகழ்ச்சி இன்றும் எனது நிலைவில் இருக்கின்றது. அன்று கனடாவில் வசிக்கும் எனது நண்பியுடன் நீண்டநேரம் தொலைபேசியில் அளவளாவி விட்டு படுப்பதற்கு இரவு 1 மணியாகி விட்டது, உறக்கம் வரவில்லை. பல முறை சிவபுராணமும், கந்தசஷ்டி கவசமும் பாடியும் தூக்கம் வந்த பாடில்லை. சிறிது நேரம் கழித்து நித்திரையும் முழிப்பும் இல்லாத நிலையில் எனக்கு சில தோற்றங்கள் தெரிந்தன. சில நிமிடங்களுக்கு ஒரு விகாரமான தோற்றமுடைய பிள்ளையாரின் உருவம் தோண்றுவதும் மறைவதுமாக இருந்தது. பின்பு சில நிமிடங்களில் எங்கள் குருவான சிவயோக சுவாமிகளின் உருவம் கருணையே வடிவாக என்முன் வந்து போய்க் கொண்டிருந்தது. நான் அவரை நேரில் கண்டதுமில்லை. அவரை அப்போது குருவாக நினைக்கவுமில்லை. ஏன் எனக்குப் பிள்ளையாருடன் இவ்வாறு காட்சி கொடுக்கிறார் என்று நான் யோசித்துக் கொண்டு இருக்கையில் எனது மாமனரான சண்முகசுந்தரத்தின் தோற்றம் வந்து போகத் தொடங்கியது. அதே நேரத்தில் எனது மாமியார் தம்பி, இங்கே ஓடி வா என்று சத்தம் போட்டார். நான் உடனடியாக எனது கணவரை எழுப்பி சென்று பார்த்தால் எனது மாமனார் தரையில் படுத்து இருந்தார், மூச்சு அடங்கிக் கொண்டு இருந்தது, நாடித் துடிப்பும் குறைந்து கொண்டு இருந்தது. நாடித்துடிப்பும் குறைந்து கொண்டே வந்தது. எனக்கு உடனடியாக விளங்கியது. அவரை சிவயோக சுவாமிகள் பிள்ளையாருடன் வந்து அழைத்துக் கொண்டு போய் விட்டார் என்றும் என்மீது பாசம் வைத்திருந்தபடியால் வந்து என்னிடமும் சொல்லிக் கொண்டு போயிருக்கின்றார் என்றும் அந்தக் கணமே நான் குருபரன் சிவயோக சுவாமிகளாகவே எனது குருவாக ஏற்றுக் கொண்டு வழிபட்டேன். இந்த நினைவு எனது மனதில் இன்றும் பசுமையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது மாமனாரின் நண்பரான காலஞ்சென்ற திரு, இரத்தினவடிவேல் ஐயா அவர்கள் ஒருமுறை விசேடமாக வந்து இந்த நிகழ்ச்சியை எனது வாயாலேயே கேட்க வேண்டும் என்று விரும்பி என்னையும் ஆசீர்வதித்துச் சென்றார்.

எனது மாமனார் தான் சுவாமிகளிடம் சென்ற சந்தர்ப்பங்களில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை என்னுடன் பகிர்ந்துள்ளனர். நானும் அந்நிகழ்ச்சிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

அவர் பல முறை சுவாமியுடன் அவரது குடிசையிலேயே இரவில் தங்கும் பாக்கியம் பெற்றவர். பல இரவுகளில் சுவாமி. நடராசப் பெருமானே உருவெடுத்து வந்தது போல, சடைவிரித்து, ருத்ர தாண்டவம் ஆடியதைத்தான் கண்டதாக கூறியிருக்கின்றார். அப்படியான சந்தர்ப்பங்களில் தான் வியப்பும், அச்சமும் கலந்து மலைப்புடன் அவரை வணங்கி நிற்பாராம். அப்போதுதான் சிவபெருமானே மானிட வடிவம் கொண்டு சிவயோகசுவாமிகளாக அவதரித்து தன்னை ஆட்கொண்டதாக அறிந்து கொண்டதாகக் கூறினார்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் தான் அவரது குடிசையில் இருக்கும் போது ஒரு மடாதிபதி அவரைக் காண்பதற்கு வந்திருப்பதாக ஒரு அடியவர் வந்து கூறினார். அப்போது சுவாமி எனது மாமாவைநோக்கி, சண்முகசுந்தரம் இவர்கள் எல்லாம் குடும்பஸ்தர் காணும் என்னைப்போல் ஒருவரை ஏன் பார்க்க வந்தினமோ தெரியவில்லை என்று கூறிவிட்டு, செய்தி கொண்டு வந்தவரிடம் அவரை வெளியிலேயே இருக்குமாறு கூறினார். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் மாமா அவரது குடிசையில் இருக்கும் போது அவரைக் காண்பதற்கு ஒருவர் வந்திருப்பதாக செய்தி வந்தது. அவ்வாறு காணவந்தவர் ஒழுக்கமும் குறைந்தவர் என்று மாமா அறிந்து இருந்த படியால் சுவாமியார் அவரைப் பார்ப்பாரோ தெரியவில்லை என்று யோசிக்கும் பொழுதே சுவாமியார் கூறினாராம், சண்முகசுந்தரம், இங்கே கூடாதவர்கள் என்று ஒருவரும் இல்லைக் காணும் எல்லாரும் நல்லவர்கள்தான என்று இந்தியாவில் இருந்து வருகை தந்த மடாதிபதியைப் பற்றி சுவாமிகள் கூறியதும் உண்மைதான், பின்பு வந்தவரைப் பற்றி சுவாமி கூறியதும் உண்மைதான் என்று எனது மாமனார் கூறினார். அப்போது நான் அறிந்து கொண்டேன் சிவயோக சுவாமிகள் முற்றும் துறந்த முனிவர் என்பதை விட சிவபெருமானே மானிடர்களாகிய எங்கள் மீது இரக்கம் கொண்டு எமக்கு வளிகாட்டிட வந்த வள்ளல் என்று.

பிறிதொரு சமயத்தில் எனது மாமனார் சுவாமியுடன் குடிசையில் இருக்கும் சமயத்தில் செல்வந்தர்களான அணுக்கத் தொண்டர்கள் சிலர், சுவாமியின் கட்டளைப்படியே, இங்கிலாந்து தேசத்திற்கு அங்கு நடக்கவிருந்த ஒரு சமய மகாநாட்டிற்கு செல்வது பற்றி சுவாமியுடன் கலந்துரையாடினார்கள். அப்போது எனது மாமனார் சுவாமியின் அருளால் தனக்கும் அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று ஏக்கத்துடன் எண்ணி இருக்கின்றார். அவ்வாறு செல்வதற்கு பொருளும் அவரிடம் இருக்கவில்லை. வந்தவர்கள் சென்றபின்பு சுவாமி மாமனாரிடம் கூறினார். சண்முகசுந்தரம் நீர் ஏன் இதற்கு ஆசைப்படுகிறீர். நீர் உப்பிடி இன்னும் எத்தனை ஊர்களுக்குப் போகப் போகின்றீர், எத்தனை இடங்களைப் பார்க்கப் போகின்றீர் என்று அதே போல எனது மாமனார் சிவயோகசுவாமியின் பிரமத சீடரான சிவாய சுப்பிரமுனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியின் தொடர்பால் பல ஊர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் சென்று வந்துள்ளார். 1980ம் ஆண்டளவில் எனது மாமனாரின் சேவையையும் சைவசித்தாந்த அறிவையும் மெச்சி ஹவாய் சைவ சித்தாந்த ஆதீனம் அவருக்கு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது, அவரது வாழ்வில் ஒரு முக்கிய விடயமாகும். சுவாமி கேட்டுக்கொண்டபடி சைவ சித்தாந்தத்தை மக்களுக்கு விளக்கியும், தெளிவு படுத்தியும் தனது கடமையைச் செய்திருக்கின்றார். 1983ம் ஆண்டு கலவரத்தில் தனது வீட்டையும் உடமைகளையும் இழந்து யாழ்ப்பாணத்தில் சிறிது காலம் வாழ்ந்தவர். 1984ம் ஆண்டு ஹவாய் சுப்பிரமுனிய சுவாமியின் அழைப்பின் பேரில் அமெரிக்கா சென்று பல, சைவசித்தாந்தக் கோட்பாடுகள் பற்றிய, நூல்களை ஆங்கிலப் படுத்தியும் உள்ளார். சுப்பிரமுனிய சுவாமி எனது மாமனாரையும், மாமியாரையும் தங்களுடனேயே தங்கும்படி கேட்டும் அவர்கள் அதற்கு ஒப்புக் கொள்ளாமல் 1986ம் ஆண்டு தங்கள் செல்லப் பேத்தி நர்மதாவைக் காண இலங்கை வந்து பின்பு பல முறை அமெரிக்கா சென்று வந்தார்கள்.

இன்னுமொரு சமயத்தில் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் பல அடியவர்களும், எனது மாமனாரும் இருக்கும் சமயத்தில் சுவாமிகள் வீட்டுக்காரரான திருநாவுக்கரசரைக் கூப்பிட்டு திருநாவுக்கரசு இன்று இங்கிருக்கும் எல்லோருக்கும் வடை பாயாசத்துடன் நல்ல சாப்பாடு தயார் பண்ணும் என்று கூறினார். திருநாவுக்கரசரும் அப்படியே சென்று, சுவாமியிடம் வந்து சமையல் முடிந்தது என்று கூறினார். அப்பொழுது சுவாமி அவரிடம், திருநாவுக்கரசு இப்ப ஒரு பெரிய குழியாகத் தோண்டி அந்தச் சாப்பாட்டை அதில் கொட்டி மூடிவிடும் என்று கூறினார். அங்கிருந்த ஒருவருக்கும் அவர் அப்படி நடந்து கொண்டதின் காரணம் விளங்கவுமில்லை, சுவாமி விளக்கம் கூறவுமில்லை. அங்கு இருந்தவர்களுக்கு வந்திருக்க் கூடிய இடர்களை களைந்தாரோ தெரியவில்லை என்று எனது மாமனார் கூறினார்.

நான் சிவயோக சுவாமிகளைக் காணும் பாக்கியம் பெறாவிட்டாலும் எனது மாமனாரில் நான் சிவயோக சுவாமிகளைக் கண்டேன். எனது தகப்பனார் எனக்குப் பாசத்தை விளக்கியது போல எனது மாமனார் சண்முகசுந்தரன் எனக்கு ஞானத்தை விளக்கினார். எப்பவோ முடிந்த காரியம். இவ்வாறு சிவயோக சுவாமியை எனது குருவாக ஏற்று எனது கடமைகளைச் செவ்வனே செய்து வருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகர் சுவாமி ஓர் ஞானத்தீர்க்கதரிசி

ஈழத்தில் பலஞானிகள் உதித்தனர். மக்கள் எல்லோரையும் சித்தர்களென்று கூறுவார்கள். அது தவறு. சித்தர்கள் மூன்று வகைப்படுவர். ஞானச்சித்தர், நாதச்சித்தர், இரசேசுத்சித்தர் என்பவர்களே. இரசேசுதசித்தர்கள் ஆன்மீகத்தோடு வைத்தியம் செய்கிறவர்கள். ஞானச்சித்தர்கள் இறை அருள்பெற்று உதித்தவர்கள். யாழ்ப்பாணத்தில் அப்படி உதித்த சிலர் கடையிற்சுவாமி, செல்லப்பாசுவாமி, யோகர்சுவாமி ஆவார். ஞானச்சித்தர்களையே சுவாமி என்று அழைக்கப்பட வேண்டும். யோகர்சுவாமி ஞானத்தால் பல உண்மைகளைக் கண்டறிந்திருக்கிறார். ஞானச்சித்தர்கள் சிலநேரங்களில் மற்றவர்களின் கண்ணிற்குப் புலப்படாமல் நடமாடுவர். யோகர்சுவாமிகளின் வாழ்க்கையிலும் அப்படி நடந்திருக்கிறது. இவர்கள் இறைவனோடு தலைப்பட்ட அடியார்கள். உலக இயற்கையே மாறினாலும் தாம் மாறாத் தலையாளர்கள் என்பதை அப்பர் பெருமான் இப்படி விளக்குகிறார்.

"வானந் துளங்கில் என் மண் கம்பம்
ஆகில்என் மால் வரையும்
தானந் துளங்கித்தலை தடு
மாறில் என் தண் கடலும்
மீனம் படில் என் விரிசுடர்
வீழில்என் வேலை நஞ்சுண்டு
ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே"

ஞானத்தால் ஆனவர்கள் இப்பேற்பட்டவர்கள். ஆகவே யோகரை சித்தர் என்று கூறாமல் யோகர்சுவாமி என்று கூறுவது சாலச் சிறந்தது. பல குரு இருந்தாலும் சிறந்த சீடனைக் காண்பது கடினம் என்று பல ஞானிகள் கூறுவர். அதற்கமைய ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரை பைத்தியமென தொடக்கத்தில் பரிகசித்தவர்கள் பின் அவரின் உண்மை வடிவத்தை அறிந்தார்கள். அவரின் சிறந்த சிந்தனைகளை அவரின் சிஷ்யரான சுவாமி விவேகானந்தர் முழுமையும் பரம்பியதுபோல, 'விசர் செல்லப்பன் என எல்லோராலும் முதல் ஏளனம் செய்யப்பட்டவர். பின் அவரின் ஆழ்ந்த சிந்தனைகளை அவரின் உத்தம சீடரான சிவயோக சுவாமிகள் உலகம் முழுவதும் பரவச்செய்தார். ஆழ்ந்த சிந்தனைகளில் மிகச் சிறந்தது. "ஒரு பொல்லாப்புமில்லை, முழுவதும் உண்மை, எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம்". யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களில் பெரும் பகுதி அவரின் குருவைப்பற்றியது.

சுவாமியின் பக்தர்கள் தங்கள் அனுபவங்களை எழுதுவார்கள், அதுபோல் நானும் எங்கள் குடும்பத்திற்கும் சுவாமிக்குமுள்ள தொடர்பை தரலாமென எண்ணுகிறேன். எனது தாய் மாமன் முகாந்திரம் வைத்திலிங்கம் (High Court Secretary) சுவாமியார் வீதியில் வசித்து வந்தவர். நான் பிறப்பதற்கு முன் தொடங்கி எனது தாயார் கொழும்புத்துறைக்குப் போகும்பொழுது சுவாமியின் ஆசீர்வாதம் பெற்று வருவார். நான் பிறந்த பொழுது தயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் பெயர்போல் எனக்குச் சூட்டினார் (சிவயோகநாதன்). சில காலத்தின் பின் குடும்பப் பிரச்சனை காரணமாக தாயார் கொழும்புத்துறைக்குப் போவதில்லை. வேறு இடத்தில் சுவாமியைச் சந்தித்தால் அவரின் ஆசீர்வாதம் பெறுவர். எனக்கும் எனது மூத்த சகோதரிக்குமிடையில் 10 வருஷ வயது வித்தியாசம். காலப்போக்கில் Hindu College Board, இந்துப் பெண் பிள்ளைகளுக்கு ஓர் தனிக்கல்வி கூடம் அமைக்க தீர்மானித்தார்கள். அச்சபைக்கு அப்போ தலைவராக இருந்தவர். Speaker Sir வைத்திலிங்கம் துரைசாமி. அக்கல்லூரிக்கு முதல் வந்து ஆசிரியைகளைத் தேர்ந்தெடுத்தார்கள். அதில் என் சகோதரியும் ஒருவர். சுவாமி யாழ் நகருக்கு வரும் பொழுது கஸ்தூரியார் வீதியில் இருந்த வைத்தியர் கஸ்தூரிமுத்துகுமாரு வீட்டின் முன் திண்ணையில் இருப்பார். வைத்தியரிடம் வாறவர்கள் சுவாமியைக் கும்பிட்டு விட்டு வைத்தியரிடம் செல்வார்கள். ஒரு நாள் என் சகோதரியும் வேறு இரு ஆசிரியைகளும் வைத்தியரைக் காணப்போகும் பொழுது சுவாமி வழக்கம்போல் குந்தில் இருந்தார். ஒவ்வொருவராக சுவாமியை வணங்கினார்கள். எனது சகோதரி வணங்கும் பொழுது நீ வைத்திலிங்கத்தின் மருமகளல்லோ, போய் நல்லாய்ப்படி என்று ஆசீர் வதித்தார். அந்த உற்சாகத்துடன் படித்து மகரகம ஆசிரியர் பயிற்றிக்கூட நுழைவுத் தேர்வில் சித்தி அடைந்து பயிற்றப்பட்ட ஆசிரியராக ஓய்வு பெறுமட்டும் யாழ் இந்து மகளிர் கல்லூாயில் கற்பித்தார். சுவாமியின் ஆசீர்வாதத்தால் இந்நிலைக்கு வந்தேனென்பர்.

நான் S.S.C பரீட்சை எழுதுவதற்கு முன் அவரிடம் போய் என்ன சொல்கிறார் என்று நினைத்து ஒருநாள் காலையில் கொழும்புத்துறைக்கு போய் வேறு சிலருடன் அங்கு இருந்தேன். தேவாரங்கள் புராணங்கள் படித்து முடிய பார்த்தேன் அதற்குள் நான்தான் மிகவும் ஓர் சிறியனாக இருந்தேன். சில நிமிடங்களின் பின் அவர் நிமிர்ந்து என்னைப் பார்த்து உரத்த குரலில் இங்கே சாத்திரம் இல்லையெடா, ஓடிப்போய்ப் படியெடா என்றார். நான் கும்பிட்டு விட்டு வந்தேன். வீதியில் எங்காவது அவரை கண்டால் கும்பிட்டு விட்டுப் போவேன். அவருடைய சொற்படி படித்து பல்கலைக்கழகம் சென்று ஓர் பட்டதாரியானேன். அவருடைய இறை ஈர்ப்பினால் இன்றும் அவருடைய திருவடி வழிபாட்டில் அவருடைய நற்சிந்தனை பாடல்களைப் பாடுகிறேன்.

சுவாமியின் அருளால் நான் புகுந்த இடமும் சுவாமியின் பக்தர்கள். என் மனைவியின் தந்தை இறங்கூனில் உத்தியோகம் பார்த்ததனால் மனைவியும் சசோதரர்களும் அங்கு பிறந்து சிறுவர்களாக இருக்கும் போது, இரண்டாம் உலகப்போர் தொடங்கி விட்டது. யப்பானியர்கள் போரில் பல இடங்களைப் பிடித்து விட்டார்கள். சிங்கப்பூரையும் பிடித்து விட்டார்கள். அடுத்து பர்மாவில் தொடங்குமுன் மனைவியின் தாய்மாமன் ஆறுமுகசுவாமி இந்தியாவிற்குப் போய் அங்கு அவர்களை கப்பலில் வரும்படி அழைத்தார். மனைவியின் தாயும் பிள்ளைகளும் இந்தியாவுக்கு வந்தார்கள் ஆனால் தந்தை உத்தியோகத்திற்காக இரங்கூனில் தங்கி விட்டார். தாய்மாமன் அவர்களை இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கூட்டி வந்தார். அவர்கள் தங்கள் உடுவில் வீட்டில் தங்கினார்கள். பர்மாவில் கடும்போர் நடந்து யப்பானியர் கைப்பற்றி விட்டனர். அதனால் தகப்பன் யாழ்ப்பாணம் வர முடியாமல் நடை பாதையாக வட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவுக்கு பலநாட்களின் பின் வந்தார். வீட்டுக் காரருக்கு அவா் எங்கு இருக்கிறாா் என்ற தகவல் கிடைக்காமல் கவலையுடன் இருந்தார்கள். அப்போ மனைவி சிசீலாவுக்கு வயது ஏழு.

ஒருநாள் அதிகாலையில் சுவாமி உடுவிலுள்ள அவர்களின் நாற்சார் வீட்டின் முன் விறாந்தையிலுள்ள சார்மனைக் கதிரையில் சார்ந்தபடி இருந்தார். மனைவியின் தாயார் நித்திரை விட்டு எழுந்து முன் கதவை திறந்த பொழுது சுவாமியார் இருப்பதைக் கண்டு அவர் முன் சென்று விழுந்து கும்பிட்டார். சிறிது நேரம் சுவாமி பேசாமல் இருந்து விட்டு, தாயாரை நோக்கிக் கூறியது வெள்ளைக்காறன் வெல்லுவான் அவர் வருவார் பயப்படாதே என்றார். பிள்ளைகளும் அவரை வணங்கினார்கள். சுவாமியை உபசரித்து அனுப்பினார்கள். அதன் பின் மனைவியின் தாயாருக்கு அவர் வந்து சேருவார் என்ற நம்பிக்கை இருந்தது.

சிலகாலம் சென்றபின் ஒருநாள் மாலை ஒரு சிறு பை தோளில் இருந்தபடி மனைவியின் தந்தை வாசலில் நின்று மனைவியின் பெயரைக் கூப்பிட்டார். எல்லோரும் விறாந்தையில் வந்தபோது அவரைக் கண்டதும் ஆனந்தக் கண்ணிர் விட்டனர். அவர்தான் பட்ட கஸ்டங்களை விவரித்தார்.

உடுவிலில் தாங்கள் தனிய உதவியில்லையென்று மல்லாகத்தில் உள்ள உறவினர்கள் வீட்டிற்குக் கிட்ட புதுவீடு கட்டி இருந்தார்கள். இப்பவும் அவர் இருந்த சார்மனைக்கதிரை எங்கள் வீட்டில் இருக்கிறது.

மனைவியின் ஒருதாய் மாமன் குமாரசுவாமி, சுவாமியின் மிகுந்த பக்தியாளர் கொழும்பில் அரசாங்க உத்தியோகம் பார்த்தார். அவர் ஒவ்வொரு முறையும் விடுமுறையில் வாருகிற முதல் நாளிலும் திரும்பி போகுமுன்னும் சுவாமியைத் தரிச்சித்துத்தான் போவார். ஒருமுறை வந்தபொழுது மாலையில் பிரயாணம், காலையில் சுவாமியைப் போய் தரிசித்தார். சுவாமியின் முன் இருந்த பொழுது, அவர் நிமிர்ந்து நோக்கி இன்று பயணம் போகாதே என்றார்.

அவர் சொன்னபடி அவர் அன்று பயணம் போகவில்லை. மறுநாள் செய்தி வந்தது. அன்று போன புகையிரம் தடம் புரண்டு சிலருக்குக் காயமென்று. இரண்டு நாடகளின் பின் சுவாமியின் ஆசீர்வாதம் பெற்றுச் சென்றார்.

மனைவியின் தாயார் அமிர்தவல்லி தம்பிக்கு வயதாகி விட்டது என்று பெண்பார்க்க முயன்றார். அவர் விடுமுறையில் வந்த பொழுது தமக்கையின் எண்ணத்தை அறிந்தார். வழக்கம் போல் வந்த அன்று சுவாமியைச் தரிசிக்க சென்றார். சுவாமிக்கு முன் இருந்த பொழுது சுவாமி அவரை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார், அப்போ இவர் சுவாமியிடம் தன் அக்காவின் எண்ணத்தை கூறினார். சுவாமி சில நிமிடங்கள் கண் மூடியபடி இருந்து விட்டு பின் நிமிர்ந்து உனக்கு திருமணம் வேண்டாம் என்றார். சுவாமி சொன்னதை அக்காவிடம் கூறினார். இதைக்கேட்டதும் தமக்கை பெண் பார்ப்பதை விட்டிட்டார்.

ஒரு வருடப் பிறப்புக்கு விடுமுறையில் வீட்டுக்கு வந்த பொழுது சுவாமியை தரிசிக்கச் சென்றார். அங்கு இருக்கும் பொழுது சுவாமி சொன்னார் உனக்கு உத்தியோகம் தேவையில்லை. இதை அக்காவிடம் சொல்ல, அவ இப்ப வீட்டில் சும்மா எப்படி இருப்பாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் வேலையைப் பார் என்றார். தமக்கையின் வேண்டுகோளின் படி வேலைக்குப் போய்விட்டார்.

அதன் பின் யூன் மாதம் 4ம் திகதி யாழ்ப்பாணம் வர இருந்தார். அன்று ஸ்ரேசனுக்கு போகுமுன் சிறிது நேரம் ஓய்வெடுப்பதற்கு படுக்கையில் உறங்கினார். ஸ்ரேசனுக்கு போக நேரமாகி விட்டது என்று நண்பன் அவரை தட்டி எழுப்ப அவர் எழும்பவில்லை. அந்த உறக்கத்தில் இறைவனடி சேர்ந்து விட்டார். அப்போது அவருக்கு வயது 38. இதுவும் சுவாமியின் ஓர் ஞான தீர்க்க தரிசனம் வேறு சம்பவங்களும் நிகழ்ந்தது, எல்லாவற்றையும் எழுதக் கட்டுரை நீண்டுவிடும் ஆதலால் சுவாமியின் அருளுடன் முடிக்கிறேன்.

"சுவாமி திருவடி தொழுவோம்"

ஞானநிலை பேசுகின்ற கூர்ந்த கண்கள்!
நற்றவத்தோர் உருகாட்டும் வளர்ந்த தாடி!
மோனநலம் விழைகின்ற தூய சிந்தை!
முப்பொழுதும் இறைநாமம் சொல்லும் நாவால்!
ஆனதொரு ஆகுசெயல் தெளித்து தன்முன்
அடி வீழ்ந்தோர்க் குரைக்கின்ற ஆற்றல் கொண்டு
வானவர்போல் மண் மீதில் நம்காலத்தே
வாழ்ந்த முனி திருவடிகள் தொழுவோம் வாரீர்

சி.சிவயோகநாதன் (S.L.E.A.S)
பலாலி ஆசிரியர் கலாசாலை
விரிவுரையாளர், உப அதிபர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Homage to Siva Yogaswami

We in Sri Lanka consider ourselves greatly blessed to have had a highly venerated spiritual master Satguru Siva Yogaswami [1872 -1964] living amongst us during the past century. He arose as the rejuvenator of the perennial honoured hierology of the Sanathana Dharma. He upheld this path of the righteous way of living and his message spread far and wide to many parts of the world. Though five decades and more have passed since he shuffled off his mortal coil, his subtle presence and guiding light continues to be ever with us.

Our human intellect fails to unravel or decipher Siva Yogaswami. How can one measure the glory of one who transcends time and space? Our knowledge of him is circumscribed by our individual conditioning. People labelled him as a Jnani , a Yogi, a Siddhar and so on. This brings to one's mind, the story of, 'The blind men and the elephant'. Though devotees failed to grasp the whole truth about Swami, certain facets of his divine personality was revealed to some of them who closely associated with him. The innumerable personal experiences and miraculous episodes reiterated by devotes makes one feel that Swami had an unusual awareness that went beyond the limits of time and space.

Siva Yogaswami Swami lived as one amongst the common people, leading a strictly ascetic life. He resided in a humble thatched hut at Columbuthurai, Jaffna, from where he trod the streets of Jaffna and its suburbs almost daily to reach the common people. He mingled with all categories of people inspiring and urging them to lead a pure godly life selfless service. During the early part of his life he frequently traversed the length and breadth of Sri Lanka reaching the people there. The ashram premises, where Siva Yogaswami resided for over six decades is maintained today as a place of pilgrimage. His remains, the asthi- the sacred ashes after cremation has been enshrined there for posterity.

The people from all walks of life seeking solace and spiritual guidance in great number thronged there to be in Siva Yogaswami's presence then when he was physically present. He could read their past and foresee their future like an open book. Many went to him with problems related to mundane matters; a sickness to be cured; a new job; a promotion; an exam to be passed; daughter's marriage and so on. And in his presence a solution they did find. Swami once remarked, "It is in the nights their woes and wails reach me, their demands, their longings reach me across space and I am unable to sleep or rest. The greater they are in the mire of samsara the greater need they have for me. I am like a sweeper a cleanser of their conscience. How can I refuse them?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A few shuddered to approach him for he berated some harshly, so they feared that their hidden motives and evil thoughts would be exposed. When one devotee reported to him, "Swami, the people often complain about your apparent temper and harsh words" Swami responded "Is not fire necessary to burn rubbish?"

He transcended the narrow confines of orthodox religion, Buddhists, Christians, Muslims and even agnostics would come to him for solace. Irrespective of one's race religion or status, he showered unconditional compassion to one and all. ." Other than his mother tongue Tamil. Swami was fluent both in Sinhala and English; he addressed those who went seeking him, in their own language and in accordance with their religious background so that they could understand and benefit. He would often repeat, "At the top of the mountain, you would find it very cool. There would be none of the dissimilarity that you see at the bottom of the path."

Only a few aspirants went to him seeking spiritual guidance among them were earnest seekers of truth who came from far off foreign countries. Most among them were well-known dignitaries, they came to him seeking, spiritual guidance after having failed in their search in many other countries. They found peace and solace in his presence. Some among them embraced a life of renunciation and took to ascetic life. Among them are foremost, an American, Swami Sivaya Subrumuniya the founder of the Iravan temple and Ashram at Kauai U.S.A.; Santhaswami J. H. Ramsbotham- [Viscount Lord Soulbury], from Britain son of Lord Soulbury; Barry Owen Windson from Sydney Australia; Gauripala the German Swami; Dr. James George from Canada, posted in Sri Lanka as Canadian, High Commissioner for Sri Lanka, India and Iran, went with his family regularly to Jaffna to see him.

Many Sri Lankan well-known luminaries of this country politicians and persons of eminence, belonging to all communities came all the way to Jaffna seeking him. To name a few of them: The late Hon. Minister .S. W.R.D. Bandraranayke (1939) then when he was the Minister of local administration, Hon. Minister of Education, Nissanga Wijeratna, Sir Kandiah Vaithyanathan, Speaker Duraisamy, Dr. Susangaga Weerperuma [ author of 'Homage to Yogaswami'], Mr . Tikiri Banda Dissanayake [secretary, London Buddhist Vihare.1958] Mr. Ananda Pereira [ Crown counsel ,Colombo.], Mr. Sam Wickramasinghe [(1963), journalist], Venerable Anandamaithri of Balangoda, he also directed another Bikku to Yogaswami to seek guidance in meditation. Swami not only helped this Bikku spiritually but cured his physical ailment too.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We recall here the memorable words said by Swami to Sri .C. P. M .Abeyasekara (1962) "You may be a Sinhalese and I a Tamil but as far as spiritual attainment is concerned all living things are equal. Before God all are equal. Lord Buddha has taught the doctrine of Ahimsa. If you hurt another, you hurt your own self. If you do anything with a pure heart you will reap the fruits of happiness in your life." To the Christians Swami quoted profusely from the Bible which he had studied when in school -'Love thy God with all thy might and love thy neighbour as thy self.'' he assured Justice. H. W. Thambiah a Christian devotee of Swami quoting "Knock and it shall be opened." A remarkable follower was the Supreme court Judge, Justice Akbar. Swami visited him in his home when he was in bed stricken ill by the trauma of witnessing an execution done in the gallows in Jaffna prison.

Swami Vipulanda and Swami Prematmanda both of Sri Ramakrishna Mission, had met Swami in their early youth. Swami encouraged their urge to join the mission and serve the people. Swami Asangananda ( 1954 ) the then president of the above mission had met Siva Yogaswami on many occasions, once Swami had affirmed to him, ''God is in you .God is in him and God is in her; see God in all beings and banish all other thoughts."

Among the ardent close disciples of Siva Yogaswami, mention may be made of Chellathurai Swami and Markandu Swami of Jaffna who turn out as ascetics and came to be venerated by the people.

Among the common people of Jaffna, Swami had a large number of ardent devotees and followers among them, many were the educated elite there who held esteemed professions and positions both in the government and private sectors. The list of these eminent personalities would be too long to name. A large number of common people too of all ranks ranging from rickshaw pullers to street vendors and destitute were not excluded from his grace. He empathized, helped, consoled and guided them in the matters both worldly and religious life. He accepted the many desperate toiling and suffering needy people who took refuge in him. Swami encouraged many of his wealthy devotees to fulfil their material wants.

Today when I look back on my life, I consider myself doubly blessed, to have been born during the life time of Siva Yogaswami to a family who venerated Swami as their Guru. Our home in Jaffna town was quite close to Swami's Ashram. Commencing form my maternal grandparents our family come under Swami's guidance. I had the opportunity of having had the darshan of Swami as a child. Even though I was then in my early childhood, Swami's immaculate purity, evoked a feeling of reverence in me. His stately bearing his majestic walk, his effulgent face, the broad forehead adorned with lustrous holy ash, the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

eyes with sharp penetrating look, flowing white beard, his hair neatly combed and tied in a knot, his simple attire a pure white cotton verti draped around his waist, all these are clearly photographed in my memory.

My maternal grandfather, Chelliah lived during the time of Satguru Chellappa Swami and his disciple Yogaswami. My grandfather's humble dwelling was graced by Chellappa Swami many a time and later followed by Yogaswami. My mother was fortunate to have witnessed Chelleppa Swami in her childhood. My Grandfather, being an ardent devotee of Lord Murugan, recited Kanthapuranam daily up to his last days. Chellappar Swami once referred to the reason for his frequent visit to my grandfather. to his followers. He said that he was drawn to visit homes where Kanthapuranam is recited and Chelliah was one among them. This may be one of the reasons why Chellappa Swami was drawn to his house. On one such visit when Swami was seated on a bench there, my grandfather fell prostrate at his feet gripped it tight and demanded that unless Swami grants the boon of a son to him he will not release his grip. Swami shouted, "leave me, leave me" got free and went off abruptly. Within a year, by the grace of Swami, the boon, the gift of a son was granted.

After Chellappa Swami attained Mahasamadhi in 1915, his disciple Yogaswami stepped into to fill his Guru's place . And from then on the family continued to venerate him as their Guru and not a single event of any importance ever took place in our family without first seeking the blessing of Yogaswami. Our extended family members, who now count up to the fifth generation continue to venerate Satguru Siva Yogaswami.

Just two days before my grandfather's final departure, Siva Yogaswami walked in un-announced into the house, calling my grandfather's name he went straight to the bedside where he was lying sick. Swami took some holy ash and spread it on my Grandpa's forehead and taking both his hands and holding them endearingly near to his own chest, sang thevarams and then left abruptly. On the day of his funeral, Swami sent a *erankalpa,* a poetic stanza, composed and written in Tamil in his own handwriting. The message conveyed being – '...... there is no cause for the wife and children to mourn or grieve, be assured that majestic Chelliah rests at the sacred feet of Lord Siva'.

Parama Guru Chellappa Swami was perceived by Siva Yogaswami as God in human attire. The Guru's sacred feet- Thiruvadi was his eternal rest and the sole object of his adoration and worship. Yogaswami tenaciously trod to perfection the - path demarked by his Guru. Chellappa Swami put his disciple through austere penance and severe tests. Siva Yogaswami attained Self -realization by his intense tapas and above all by the grace of his Guru and God. Recalling his Guru's profuse blessing and grace he has affirmed, "By the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

grace of my Satguru the endless anxieties of endless births and all delusions ended, maya the illusion tormenting me vanished forever and my mind became still.'' And even to his last breath, on the eve of his own Samadhi he had expressed his feeling of eternal gratitude to his Guru, nurtured in his heart, "If I served my Sat Guru Chellappa Swamigal as a slave for ever and ever, I should not have given in return even a thousandth part of thousands of what I owe him." -

Siva Yogaswami's assurance of grace he bestowed on all his dear ones on the eve of his Mahasmadhi [ $24^{th}$ March 1964 ]is "I have not left any one of my loved ones by the wayside. I prepare to go, having done what could be done to each one according to ones need."

